ரூ.5

# மேனகா

மாத நாவல்



# வைகறைப் பூக்கள்

அகிலா கோவிந்த்




## 1

அதிகாலை ஐந்து மணி

அழகிய விழிகள் அகல விரிய சுமதி இமைகளைத் திறந்தவள் சற்று நேரம் எதுவும் தோன்றாமல் அப்படியே விழித்துக் கொண்டிருந்தாள்.

நேற்று அலுவலகத்தில் நடந்த விஷயங்கள் மெல்ல மெல்ல உணர்வுக்கு வந்தது. மாலை வேலை முடியும் சமயம் பாஸ்கர் தயங்கித் தயங்கி வந்தது– அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டியது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

கடிதத்தை படித்த அவளுக்கு அதிர்ச்சி தான் இருந்தும் எதையும் வெளிக்காட்டாத உணர்ச்சியுடன் நிமிர்ந்தாள்.

"ஒண்ணும் அவசரமில்லை சுமதி. மெதுவா பதில் சொன்னாப் போதும்..." பாஸ்கர் பவ்யமாய்ச் சொன்னான்.

சுமதி தலையசைத்தாள்.

பாஸ்கர் அகன்று விட்டான்.

பாஸ்கர் அவள் பதிலுக்காக இனி ஒவ்வொரு நாளும் காத்திருப்பான். அவனுக்கு என்ன பதில் சொல்வது?

மேலும் குழப்பமாய் யோசித்தவளை உற்சாகமான குரல் வந்து உலுக்கியது.

"குட் மார்னிங் மை டியர் கேர்ள்..."

அப்பா குணசேகர் உற்சாகமாய் காலை வாக்கிங்கிற்கு தயாராகிக் கொண்டிருந்தார். அறுபத்தைந்து வயதிலும் அவர் காட்டும் சுறுசுறுப்பை கண்டு வியந்தபடி சுமதி எழுந்தாள்.

பதிலுக்கு காலை வணக்கத்தை தெரிவித்தவள் பரபரவென அவருக்குத் தேவையான கான்வாஸை மின்னல் வேகத்தில் எடுத்து வந்தாள்.

"வேண்டாம்மா. நானே எடுத்துக்கறேன். உனக்கெதுக்கும்மா சிரமம்?"

சிணுங்கியபடி குணசேகர் அவள் பக்கம் வந்தார். புன்சிரிப்புடன் பூத்துக் குலுங்கும் மகளை வாஞ்சையாய் பார்த்தவர் அன்புடன் தலைமுடியை வருடினார்.

"என்னப்பா அப்படிப் பார்க்கறீங்க?"

"துள்ளி ஓடும் புள்ளிமான் மாதிரி பூத்துக்குலுங்குற உன்னோட அழகை ரசிக்க காயத்ரிக்கு கொடுத்து வைக்கலையம்மா...!"

"யாரு அம்மாவைச் சொல்றீங்களா?"

குணசேகர் தலையாட்டியபடி எதிர் சுவரில் மாலையுடன் தொங்கிய போட்டோவை வெறித்தார்.

"அதான் நீங்க இருக்கிங்களேப்பா..."

மறுகணம் குணசேகர் சுதாரித்துக் கொண்டார்.

"சரிம்மா நான் வ்ாக்கிங் கிளம்பறேன்..."

குணசேகர் கிளம்பினார்.

சுமதி புன்முறுவலுடன் கையசைத்து விட்டு உள்புறம் திரும்பினாள். படபடவென காலைச் சமையல் வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து குணசேகர் திரும்பியபோது சுமதி வேலைகளை முடித்து அலுவலகத்திற்கு ரெடியாகிக் கொண்டிருந்தாள். குணசேகர் சுமதியின் ஹாண்ட்பேக் வாரை சரிசெய்ய எண்ணியவர் ஹாண்ட்பேக்கை எடுத்து பார்த்தார். என்ன இது சீட்டு...? உள்ளிருந்து துண்டுச்சீட்டு ஒன்று கீழே விழ.. ஆர்வமில்லாமல் எடுத்துப் பிரித்து குணசேகர் பார்வையை ஓட்டினார். மறுகணம் பயங்கரமாய் அதிர்ந்தார்.

கடிதத்தில் தெளிவான கறுப்பு மையில் வாசகங்கள்.

"சுமதி எனக்கு உன்னை ரொம்பவும் பிடித்துவிட்டது. மனதார உன்னை விரும்புகிறேன். மனதுக்குள்ளே உன்னை காதலித்து உருகுகிறேன். உன்னுடைய பதிலைச் சொல்லுவாயா...? பாஸ்கர்."

கடிதத்தை பார்த்த குணசேகர் புரிந்து கொண்டார் சந்தேகமில்லை. காதல் கடிதம் தான். யாரிந்த பாஸ்கர்...?

ஒரு கணம் அப்பட்டமாய் அதிர்ந்தவர். மறுகணம் சுதாரித்துக் கொண்டார். சுமதி.. யாரையாவது... காதலிக்கிறாளா...? பிறகு.. எப்படி.. இது.. இந்த லெட்டர்..? சுமதியிடமே கேட்டுவிட வேண்டியது தான்.

திரும்பவும் டைனிங் டேபிள் பக்கம் போய் உட்கார்ந்து கொண்டார், ஒன்றும் நடவாதது போல் முகத்தை வைத்துக் கொண்டாலும். சாப்பிட வந்த சுமதி உடனே கண்டுபிடித்து விட்டாள்.

"என்ன.... டாட்... காலையிலே... ஹெவியா.. ஏதோ யோசனை பண்ணுறீங்க..?"

"ஒண்ணுமில்லம்மா!"

"நோ! நீங்க மறைக்கறீங்க. முகம் மனசோட கண்ணாடின்னு சும்மாவா சொன்னாங்க..? கமான்... சொல்லுங்க..! என்ன... விஷயம்?"

"யூ.. ஆர்.. கரெக்ட்.. சுமதி!" என்றபடி அதற்கு மேல் விஷயத்தை மறைக்க விரும்பாதவராய் குணசேகர் தயக்கமாய் அவளைப் பார்த்தார்.

"சொல்லுங்கப்பா..."



"சுமதி.. உன்னோட ஹாண்ட்பேக்கை சரிசெய்யப் போனேன்.

அப்போ... இது.. இந்த.. லெட்டர்.. அதிலயிருந்து வெளியே. யாரும்மா.."

பட்டென விஷயத்தை... உரைத்தவராய்... அந்தக் காதல் கடிதத்தை சுமதியின் முன் நீட்டினார். அவளது முகக் குறிப்பை ஆர்வமாய் ஆராய்ந்தார். சுமதி எந்தச் சலனமும்... அதிர்ச்சியுமில்லாமல் மாறா புன்னகையுடன் அந்த லெட்டரை வாங்கி.. மேலும் சிரித்தாள்.

"ஓ.. இது.. பாஸ்கர்.. லெட்டரா? நேற்றே.. உங்ககிட்ட சொல்லணும்ன்னு நினைச்சேன்... மறந்தே போய்ட்டேன்.. திடீர்ன்னு.. இப்படி ஒரு லெட்டரை கொடுத்திட்டாருப்பா...!"

கள்ளமில்லாமல் சிரிக்கும் மகளை ஆச்சரியமாய்ப் பார்த்தார் குணசேகர்

"யாரும்மா... இந்த... பாஸ்கர்...?"

"ஆபிஸ்ல.. என்னோட... வொர்க் பண்றார்ப்பா..."

"அப்போ... அவரு.. அவரு ஏன்ம்ம்மா...?" குணசேகர் நெற்றியை சுருக்கிக் கொண்டு சுமதியைப் பார்த்தார்.

"நானே.. சொல்றேன்ப்பா... எல்லார்கிட்டயும் பழகுற மாதிரித்தான் பாஸ்கரோடு பழகுவேன். ஆனா நேற்று.. என்னன்னு.. தெரியல வேலை முடிஞ்சு வெளிய வரும்போது. சுமதி ஒரு நிமிஷம்ன்னு... கூப்பிட்டுக் கொடுத்தாரு. வாங்கிப் பார்த்தேன். எனக்கு.. ஒண்ணும் ஓடல. அவசரம் வேணாம். மெதுவா. நிதானமா யோசிச்சு.. உங்க.. பதிலைச் சொல்லுங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. அவ்வளவுதான். நானும். அப்படியே ஹாண்ட்பேக்கில் லெட்டரை வைச்சேன்... மறந்தே... போயிட்டேன். இப்போ என்னப்பா... செய்ய...?

குழந்தை போல் சொல்லிட்டு கேட்கும் சுமதியை ஆழமாய்ப் பார்த்தார் குணசேகர்.

"அந்த.. பாஸ்கர்.. எப்படி... அவரைப்பத்தி உனக்குத் தெரியும்மாம்மா..?"

"எனக்கு... சீனியர்ப்பா... எனக்கு.. ரெண்டு வருஷம் முன்னாடியே ஆபீஸ்ல வேலை... பார்த்துக்கிட்டுக்கிறார். ரொம்ப காம் டைப். தானுண்டு தன்... வேலையுண்டுனு இருக்கிறவருதான்.. அவர் எப்படி... இப்படி.. காதல் கடிதம் எழுதி... கொடுத்துக்கிட்டு... எனக்கே... அதான் ஆச்சரியம்... அசந்து போயிட்டேனப்பா..."

குணசேகர் மௌனமானார்.

"என்னப்பா... யோசிக்கறீங்க...?"

"எனக்கு... ஒரே... குழப்பமா... இருக்கும்மா... ஒரு முடிவுக்கும் என்னால வர முடியல..."

"கரெக்ட...! பாஸ்கர் லெட்டர் கொடுத்தப்போ... எனக்கும் இப்படித்தான்ப்பா இருந்துச்சு. என்னோட தலைவலியெல்லாம் உங்ககிட்ட கொடுத்திட்டேன். நீங்க... யோசிங்க..."

குணசேகர் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டு. நிமிர்ந்து சுமதியை தீர்க்கமாய்ப் பார்த்தார்.

"ஏனம்மா... சுமதி.. அந்த பாஸ்கர் நல்லவருன்னு சொல்ற, உன்னையே காதலிக்கிறார். விரும்புறார். நீ... ஏன்.. அவரை கல்யாணம் கட்டிக்கக் கூடாது.



## 2

**பா**ஸ்கருக்கு இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. திரும்பத் திரும்ப.. அந்த நினைவு, சுமதியின் வசீகரமான முகம். அந்த இதழ் விரியும் புன்னகை. அந்த படபடக்கும் பார்வை. காந்தமாய் ஈர்க்கும் கண்கள். இனிமையான ராகமாய் காதில் தேனொழுக பாயும் குரல் வீச்சு. 'ஸ்வீட் மெலோடியஸ் வாய்ஸ்'. தனக்குத் தானே தன்னை மறந்து உச்சரித்துக் கொண்டு அவளையே நினைத்து உருகிக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

இரவு முழுவதும் தூக்கமில்லையானாலும் கண்களில் லேசான அசதியைத் தவிர.. உடம்பு புத்துணர்வோடு இருந்தது. சுமதியை நினைத்துக் கொண்டிருப்பதே.. பாக்யம்தான்... புத்துணர்வுதான்.. மனதிற்கு பூஸ்டர்தான்.

இன்று... சுமதி... என்ன சொல்லப் போகிறாள்...? லெட்டரைப் பிரித்து படித்திருப்பாள். என்ன முடிவெடுத்திருப்பாள்...? ஆனாலும்.. நமக்கு துணிச்சல்தான்... இரண்டு வருடமாய் அவளையே மனதுக்குள் பூஜித்து.. உருகி... காதலித்து இன்று.. துணிச்சலாய் லெட்டரை கொடுத்து? என்னைப் பார்க்கும் போதெல்லாம்... ஒரு விதமாய் படபடத்துப் போய் பார்ப்பாளே...? ஒரு வேளை அவளுக்கும்... மனதில் என் மீது ஒரு வித ஈர்ப்பு... காதல்... இயற்கையாகவே இருந்திருந்தால்..?

பாஸ்கருக்கு அந்த நினைப்பே ரொம்பவும் சுகமாயிருந்தது. காதலில் அவனும் விரும்பி...

அதே போல் அவளும் அவனை விரும்பிட்டால் அது... அது... எப்படி இனிமையாய் இருக்கும்..?

அந்த வாழ்க்கை... எவ்வளவு சுகமாய் இருக்கும்...?

வெளியே பால் வண்டிகளின் மணி ஒலியோடு பொழுது துவங்கியிருந்தது. லேசான வெளிச்சம் ஜன்னல் வழியாக.. எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. கையில் இறுக பிணைத்திருக்கும் டைட்டன் வாட்ச்சின்



மணியைப் பார்க்க பிரியமில்லாதவனாய் கண்களை இறுக மூடிக் கொண்டான் பாஸ்கர்.

திரும்பத் திரும்ப... சுமதியைப் பற்றி... நினைத்து... நினைத்து... அந்தக் காதல் கடலில் முத்துக் குளிக்க வேண்டும் போலிருந்தது.

காதல்... அவ்வளவு எளிதான சமாச்சாரமா...?

தானாக மனதில் வேர்விட்டு... அதன்.. விதை.. செடியாகி.. செடி.. மரமாகி.. பூத்துக்குலுங்கும் நந்தவனமாய் சோலையாய் மாறி... அந்தச் சோலையில் தான் எத்தனை... நறுமணம்?, பூத்துக்குலுங்கும் வண்ண மலர்களின்... அழகு வீச்சுதான்.... எவ்வளவு...

பாஸ்கரின் கனவில்... திடீரென... தடுமாற்றம் வந்தது. கனவுச் சோலை காதல்கற்பனை திடீரென கல்லவது போல் இருந்தது. எல்லா நினைப்புகளையும் மீறி அந்தக் கேள்வி அவன் முன் வந்து நின்றது.

'பாஸ்கர்... நீ... தகுதியானவன்தானா? சுமதியை காதலிக்க.. கல்யாணம் செய்ய... உனக்கு தகுதியிருக்கிறதா..? உன்னால.. முடியுமா... உன்னுடைய பொறுப்புகள்.. உன்னை நம்பி இருக்கும்... கடமைகள்.. முடியுமா.. பாஸ்கர்..?' நிஜமொன்று சட்டென கிளம்பி அவனைப் புரட்டிப் போட... அதற்குமேல் யோசிக்க மனமில்லாதவனாய் லேசான எரிச்சல் கிளம்ப கண்களைத் திறந்தான் பாஸ்கர்.

எதிரில்... அம்மா ராஜம். கையில் காபிதம்ளருடன்.

"என்ன... பாஸ்கர்... தூக்கமில்லையா...?"

அம்மா நிஜம் புரிந்து கேட்டது அவனை துணுக்குறச் செய்தது.

"இல்ல... அதெல்லாம்... ஒண்ணுமில்ல.."

நிஜத்திற்கு வந்த எரிச்சலில் விட்டேத்தியாய் பதில் சொன்னான். காபியை வாங்கி வைத்துவிட்டு எழுந்து முகம் கழுவச் சென்றான். அன்றைய கடமைகள்... தான் அன்று பார்க்க வேண்டிய வேலைகளை நினைத்து கொண்டான்.

சலிப்பு தோன்ற.. டியூபை பிதுக்கி... பற்பசையை எடுத்துக் கொண்டான். பல் துலக்கையில்... கூடத்து ஜன்னல் வழியே... ராதாவும் சுகன்யாவும் அக்கரையாய் படித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

ராதா... காலேஜ் முதல் வருடம். சுகன்யா ப்ளஸ் டூ. இருவரும் படித்து முடித்து... பின்... அவர்களுக்கு.. திருமணம் செய்து.. ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. தம்பிகள் வேறு... கணேஷ், தினேஷ் என்று. கணேஷ் எட்டாம் வகுப்பு.தினேஷ் ஆறாம் வகுப்பு. அவர்களையும் படிக்க வைத்து. ஒரு நல்ல பொறுப்புக்கு கொண்டு வர வேண்டும். செய்ய வேண்டிய கடமைகளை நினைத்த போது பகீரென கவலையாய் இருந்தது பாஸ்கருக்கு. தான் பார்த்த ப்யூன் வேலை டிஸ்மிஸ்

னதும். குடும்பப் பாரம் கண்டு பயந்து இரவோடு இரவாய் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல்.. குடும்பம் முழுவதையும் தவிக்கவிட்டு விட்டு எங்கோ சென்றுவிட்ட அப்பா மேல் கோபம் கோபமாய் வந்தது. என்னவொரு... நெஞ்சமுத்தம் அவருக்கு..? எவ்வளவு சுளுவாய் எல்லோரையும் உதறிவிட்டுப் போய் விட்டார்...?

"பாஸ்கர்.."

குரல் கேட்டு... கலைந்தான்.

அம்மா புடவை தலைப்பால் நெற்றி வியர்வையை ஒதுக்கியபடி நின்றிருந்தாள்.

"என்னம்மா...?"

"ஒரு... பத்து ரூபா... பணம் வேணும்ப்பா.. சமையலுக்கு மல்லிப் பொடியும் காய்கறியும்... வாங்கணும்..."

"என்னோட.. பர்ஸில்.. இருக்கு.. எடுத்துக்கோங்க..."

"சரிப்பா..!"

அம்மா அகன்றாள்.

பாஸ்கர் பல் துலக்கி வாய் கொப்பளித்து பெருமூச்சு விட்டான். இந்த ஐந்து பேர் குடும்பத்திற்கு.. இந்த ஐந்து ஜீவன்களுக்கு அவன்தான் மெயின் இன்ஜின். அவன் வாங்குகிற இரண்டாயிறம் ரூபாய்தான் ஒரே சொத்து. இதில்தான்... குடும்பம்.. ஓட்ட வேண்டும்..

திடீரென அவனது காதல் மனதில் அந்தக் கேள்வி உருவாகி பூதாகரமாய் முளைத்தது 'சுமதிக்கு இதெல்லாம்... தெரிந்திருக்குமா...? எனது வீட்டு நிலைமையெல்லாம் அறிந்திருப்பாளா..? இதை... என்னை.. நம்பியிருக்கும்.. குடும்பத்தையெல்லாம் அவளால் ஏற்றுக் கொள்ள முடியுமா... அவள் வீட்டில் தான் ஏற்று மதிப்பார்களா...? இது.. நடக்கிற காரியமா...? பின்.. நம்.. காதல்..?

பாஸ்கர் மனதில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த காதல் வாகனம் ஸ்தம்பித்து நின்றது. சலிப்பும் வெறுப்பும் தோன்ற, ஆபீசுக்கு கிளம்பினான் அவன்.



## 3

பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்து கொண்டிருந்தாள் சுமதி.

அவள் மனதில் அப்பா எழுப்பிய கேள்வி.. விசுவரூபமாய் சுட்டுவிரலைக் காட்டி கேட்டுக் கொண்டிருந்தது.. நீ.. ஏன்.. பாஸ்கரை.. கல்யாணம் கட்டிக்கக் கூடாது..? அப்பா



அப்படிக் கேட்டது அவளுள் பல சிந்தனைகளை பல குழப்பங்களை கிளப்பிவிட்டிருந்தது. இது நாள்வரை ஒரு போதும் அவள் காதல். கல்யாணம்.. என எதிர்காலம் பற்றி நினைத்ததுமில்லை. வரப் போகிற கணவர் நல்லவரா... கெட்டவரா.. என்றெல்லாம் எண்ணி கவலைப்பட்டதுமில்லை. அதெல்லாம். காலாகாலத்தில் உரிய நேரத்தில்.. நடக்கும். இதற்குப் போய் வீணாய் யோசிப்பானேன்.. மனதை குழப்பி கவலைப்படுவானேன்..? என அவளும் விட்டேத்தியாய் இருந்து விட்டாள்.

ஆனால் இப்போது யோசிப்பது.. ஒரு முடிவு எடுப்பது அவளுக்கு அவசியமாய்ப்பட்டது. பாஸ்கர் லெட்டர் கொடுத்தது மட்டும் காரணமில்லை. அப்பாவின்... ஆசை.. காலாகாலத்தில் உனக்கு கல்யாணம் பண்ணணுமே.. சுமதி.. என அவர் படுகிற கவலை.. இதெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது நிஜமாகவே சுமதிக்கு கவலை தொற்றிக் கொண்டது. எதிர்காலத்தை பற்றிய நினைப்பு எழுந்து வாட்டியது.

வாழ்நாள்... பூராவும்... இப்படியா... இப்படியேவா... இருந்துவிடப் போறோம்? நம் வாழ்விலும்... எப்படியும் கல்யாணம் என்ற ஒன்று நடக்கும். கணவன், என்று ஒருவர் வரத்தான் போகிறார்.. யாரோ.. முகம் தெரியாத.. பழக்கமில்லாத ஒருவரை கட்டுவதை விட... நம் கூடவே இரண்டு வருடம் பழகி நமக்கு நன்கு தெரிந்த பாஸ்கரை கல்யாணம் செய்தால்.. என்ன..? அவரைக் கட்டிக் கொண்டால் என்ன.. தப்பு..?

பாஸ்கரைப் பற்றிய நினைப்பு வந்ததுமே... சுமதிக்கு அவனது கண்ணியமான தன்மை அவனது மரியாதையான சுபாவம் அடக்க குணம் இதெல்லாம்தான் பட்டென நினைவுக்கு வந்தது. இரண்டு வருடமாய் அவளும்தான் பார்த்திருக்கிறாள். அவன் மற்ற சில ரோமியோ ஆசாமிகள் போல் அடிக்கடி அசடு வழிவதோ... தேவையில்லாமல் பேச சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டு 'ஜொள்' விடும் ரகமோ இல்லை. ரொம்பவும் அமைதியான சுபாவம். பார்ப்பவர்களை கவரும் வசீகரமான முகம்.. பேச்சு... கண்டிப்பாய்.. சர்வநிச்சயமாய். சட்டென அவனுடன் பழகும் எந்தப் பெண்ணும்.. காதல் வசப்படுகிற கம்பீரமான பர்ஸனாலிட்டிதான் பாஸ்கருக்கு.. பின்..?

பின்.. ஏன்.. பாஸ்கருடன் எத்தனை முறை பேசியும்... எத்தனை முறை பழகியும்.. இந்த.. எண்ணம்.. காதல் ஆசை.. மனதில் வந்ததே.. இல்லையே..?

சுமதி.. தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள்..?

அவளுக்கு அது ஆச்சர்யமாய் இருந்தது. உணர்ச்சிகள் இயற்கைதானே.. பருவ வயதில் காதல் வயப்படுவது.. வழக்கம்தானே..? ஆனால் அவள் வளர்ந்த சூழ்நிலை..? அப்பா.. அவளை அப்படி வளர்க்கவில்லை. சுமதியை, ஒரு சராசரிப் பெண்ணாய் சினிமா... பாட்டு.. கதை புத்தகம்.. என ஓய்வு நேரத்தில் பொழுதை போக்கி, மனதில் கற்பனைக் கனவுகளை சுமப்பவளாய் வளர்க்கவில்லை. ஒரு வித கட்டுப்பாடு.. கண்டிப்பு.. என ஒழுங்கு

முறையோடு வளர்த்திருந்தார். ஓய்வு நேரம் முழுவதையும் உபயோகமாக.. தையல் வகுப்பு, டைப்ரைட்டிங்,.எம்ப்ராய்டரி.. கூடை பின்னுதல்.. என ஏதாவது ஒரு ஒன்றை சுமதி கற்றுக் கொள்ளும்படியாகவே.. வைத்து.. அவள் யாரையும் எதிர்பார்க்காமல் தானே சுயமாய் தன் காலில் நின்று.. எதிர்கால வாழ்க்கையை, பொருளாதார தேவைகளை சந்திக்கும் துணிச்சல்களோடு வளர்த்திருந்தார்.. அப்படிக் கற்றுக் கொண்டால்தான் நெஞ்சுறுதியும்.. நிறைந்த மனதிடமும் உருவாகும் என்பது அவர் நம்பிக்கை.

யோசித்த சுமதி.. தன் நினைப்புகளுடன்.. அப்படியே ஆபீசினுள் நுழைந்தாள்.

அங்கு தனது ஸீட்டில் அக்கறையாய் குனிந்த தலை நிமிராமல் வேலை பார்த்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

அவளுக்கு பாஸ்கரைப் பார்க்க ஒருபுறம் சிரிப்பாய் வந்தது. அவன் முகத்தில் அப்பட்டமாய் அந்த தவிப்பு. என்ன முடிவெடுத்தாள்... என்ன பதில் சொல்லப் போகிறாள்...?

அலைபாயும் கண்களுடன்... இடையிடையே.. அவளை.. பார்த்து.. விட்டு... பின்.. பாராதது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு.. சிறிது நேரத்தில் திரும்பவும்.. பார்க்க.. ஆரம்பித்து... பின்.. பார்வையை விலக்கிக் கொண்டு... தவிப்பான அவனது சேஷ்டைகளை உள்ளூர ரசித்தவளாய் வேலைகளில் ஆழ்ந்தாள் சுமதி.

ஆனால் பாஸ்கரால்... பொறுக்க முடியவில்லை.

லஞ்ச் இண்டர்வெலில் சாப்பிட்டு முடித்து... தனியாய் ரிலாக்ஸாய் காற்று வாங்கிக் கொண்டிருந்த சுமதியிடம் தயங்கித் தயங்கி வந்தான்.

"சுமதி.."

"என்ன... பாஸ்கர்...?"

அவன் வந்ததை அப்போதுதான் கவனித்தவள் போல் நிமிர்ந்தாள் சுமதி.

பாஸ்கருக்கு அவளது முகத்தை... ஈர்க்கும் அந்த காந்தக் கண்களின் நேருக்கு நேர் பார்வையில் அடிபட்டு தடுமாறினான், வார்த்தைகள் வெளிவராமல் தவித்தான்.

"சொல்லுங்க.. பாஸ்கர்.."

"நேற்று.. உங்க.. கிட்ட.. ஒரு.. லெட்டர்.. படிச்சிங்களா...?"

விழுங்கி விழுங்கிச் சொன்னான் பாஸ்கர். அவனது திணறலை ரசித்துப் பார்த்தாள் சுமதி.

"படிச்சேன்..."

சொல்லிவிட்டு அவனையே பார்த்தாள் சுமதி.. அவளது மௌனம் பாஸ்கருக்கு பலத்த சந்தேகத்தை கிளப்பியது.



"உங்களுக்கு.. ஒண்ணுமே.. தோணலையா.. சுமதி...?"

"தோணுச்சு. அப்பாகிட்ட.... கொடுக்கணும்னு.. உடனே எடுத்து அப்பாகிட்ட கொடுத்திட்டேன்..."

அப்பட்டமாய் அதிர்ந்து அவளைப் பார்த்தான்.. பாஸ்கர்.

"சுமதி... நீங்க.."

"பயப்படாதீங்க.. பாஸ்கர்.. எங்கப்பா.. மத்த அப்பாக்கள் மாதிரி இல்ல. ரொம்ப.. காஷுவல்.. டைப்.. எதையும் ஈஸியா எடுத்துக்குவாரு.."

பாஸ்கரின் முகம் இறுகியது... போல் சுமதிக்கு தோன்றியது.. இன்னமும் முடிவு தெரியாத ஏமாற்றம்.. கண்களில் எரிச்சலை ஏற்படுத்த ஆரம்பித்திருந்தது. அவனது நிலையைக் கண்டு துணுக்குற்று, அவனைமேலும் தவிக்க இடம் தராதவளாய் கனிவாய் பார்த்தாள் சுமதி.

"ஸாரி, பாஸ்கர்.. தப்பா.. நினைக்காதீங்க... எனக்கு... எங்க வீட்டில எல்லாமே.. என் அப்பா தான்! அவர்கிட்ட கேட்காம... நான் எந்த முடிவும்.. எடுக்கிறதில்லை.. அதனால... கொஞ்சம்... வெயிட் பண்ணுங்க.. ஒரு.. வாரம் டயம் கொடுங்க.. ப்ளீஸ்..."

"ஓ.கே... ஓ.கே..."

தலையை பலமாய் ஆட்டினான் பாஸ்கர். மறு நிமிடமே நிற்கப் பிரியமில்லாதவனாய் அங்கிருந்து மறைந்தும் விட்டான். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுமதி.

அவளுள், பாஸ்கர் தன்னை விரும்புவது... தனக்காக விடை தெரியாமல் தவித்து ஏங்குவது எல்லாம்... இனம் புரியா உணர்ச்சியொன்றை மனதில் கிளப்பி... மகிழ்ச்சியில் தத்தளிக்க வைத்துக் கொண்டிருந்தது. இந்தப் பார்வை... ஏக்கம் தவிப்பு... இது.. இதெல்லாம் தான் காதலோ...? தனக்குத்தானே வியந்து கேட்டுக் கொண்டாள். திரும்பவும் தன்னை... வேலைகளில் ஆழ்த்திக் கொண்டாள். ஆனால்.. மனம் மெல்ல.. அவளது கட்டுப்பாட்டிலிருந்து... விலகி... பாஸ்கரைப் பற்றியே... நினைக்க ஆரம்பித்தது... போல் அவளுக்குத் தோன்றியது.

சாயங்காலம் வேலை முடிந்து... பஸ்.. ஏறி... வீடு வந்து சேர்ந்த சுமதி அதிர்ந்தாள். வீட்டினுள் பேச்சு சப்தம். முன்ஹாலில்... அப்பாவுடன் உட்கார்ந்து.. பேசிக் கொண்டிருந்தது. பாஸ்கர்... பாஸ்கரேதான்.

## 4



**பா**ஸ்கரைப் பார்த்ததும் சுமதிக்கு ஆச்சர்யமாய் இருந்தது. மனுஷர் ஊமை போல் இருந்துவிட்டு... அப்பா.. என்று சொன்னதும் வீட்டுக்கே வந்துவிட்டாரே என்று வியந்தாள்.

தன்னைக் குறும்பாய்ப் பார்த்தவளை அசட்டுச் சிரிப்பு தோன்ற தயக்கமாய்ப் பார்த்தான் பாஸ்கர்.

"அப்பா.. தெரியுமா..?அவர்தான்.. பாஸ்கர்.." அறிமுகம் செய்வது போல் சுமதி சொல்லிவிட்டு... அப்பாவைப் பார்த்தாள்.

குணசேகர் சிரித்தார்.

"தெரியும்மா..! எல்லாத்தையும்.. ஒண்ணுவிடாம.. சொல்லிட்டார், நாங்க ரொம்ப நேரமா.. பேசிக்கிட்டிருக்கோம்...!"

'அப்படியா...?'

சுமதி திரும்பவும் வியந்தவள் பாஸ்கர் பக்கம் திரும்பி." பாஸ்கர் நீங்க... வீட்டுக்கு வந்திருப்பீங்கன்னு... நான் நினைச்சுப் பார்க்கவே.. இல்ல.. இட்... இஸ்.. ஸோ.. ஸர்ப்பரைஸ்...!" என்றாள்.

"அதுக்கு.. காரணமிருக்கு... சுமதி..."

"காரணமா...!"

"ஆமா.. சுமதி... உங்ககிட்ட.. லெட்டர் கொடுத்து.. நீங்க... சொன்னபதிலை வைச்சுத்தான்... நான் தெரிஞ்சிக்கிட்டேன்.. கதைகள்ல.. சினிமாவில் வர்ற மாதிரி திடுதிப்புன்னு உங்ககிட்ட லெட்டரைக் கொடுத்தது தப்பு... எதையும் முறைப்படி செய்யனும்.. பேசனும்ன்னு புரிஞ்சுகிட்டேன். அதான்... இப்போ முறைப்படி... உங்க அப்பாகிட்ட என் விருப்பத்தை பேச... வந்திருக்கேன்..."

பாஸ்கர் இப்படிச் சொல்லியது சுமதிக்கு டக்கென ஒரு வித வெட்கத்தை இனம்புரியா உணர்ச்சியை உள்ளூர ஏற்படுத்தியது.

சட்டென பேச்சை மாற்ற விரும்பியவள், "இருங்க.. காபி கொண்டு வாரேன்..." என்று விட்டு அவசர அவசரமாய் கிச்சனுக்குள் நுழைந்து காபி தயாரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

அதற்குப் பின் சிறிது நேரம் இருவரும் பேசிவிட்டு. பாஸ்கர் விடை பெற்றுச் சென்றான்.

பாஸ்கர் சென்றதும் குணசேகரும் சுமதியும் எதிர் எதிரே உட்கார்ந்தவர்கள் கொஞ்ச நேரம் மௌனமாகவே இருந்தனர். தீவிர யோசனைக்குபின் குணசேகரே மௌனத்தைக் கலைத்தார்.

"அந்த... பாஸ்கர்... தம்பி.. ரொம்ப நல்லவராத்தான் தெரியுது... ஆனா இந்த சின்ன வயசிலே... அவருக்கு.. ரொம்ப... குடும்பச் சுமைதான்ம்மா... ரெண்டு.. தங்கைகளை கல்யாணம் கட்டிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு.. ரெண்டு தம்பிகளை நல்லபடியா ஆளாக்க வேண்டிய பொறுப்பு.. எல்லாத்தையும் ஒண்ணுவிடாமச் சொல்லிட்டாரும்மா..."

சுமதி ஒன்றும் பேசாமல் அப்பாவையே மௌனமாய் ஆழமாய்... பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அதுமட்டுமில்லம்மா... இன்னொன்றும்.. முக்கியமாச் சொன்னாரு..."

"என்னப்பா...?"



"உன்னை.. அவரு.. திடுதிப்புன்னு.. பார்த்து ஆசைப்பட்டு... பொண்ணு கேட்கலையாம்.. உன்னை... மனசுக்குள்ளே.. நினைச்சு.. ரொம்பநாளா.. பூஜித்துக்கிட்டே இருந்தாராம். கிட்டத்தட்ட ரெண்டு வருஷமா உனக்காக உள்ளுக்குள்ள.. உருகிக்கிட்டு இருந்தாராம்... இதையெல்லாம் வெட்கப்பட்டுத்தான் என்கிட்ட சொன்னாரு...!"

அதன் பிறகு குணசேகர் பாஸ்கரைப் பற்றி என்னென்னவோ சொன்னார். பேசினார். பாஸ்கரை அவருக்கு ரொம்பவும் பிடித்து விட்டது அவரது வார்த்தைகளிலே தெரிந்தது. கடைசியில், சுமதி எதிர்பார்த்தது போலவே.." என்னம்மா... பாஸ்கரை உனக்குப் பிடிச்சிருக்கா..?

என்ன பதில் சொல்லப் போற...?" என்றார்.

"ப்ளஸ்... கொஞ்சம் டயம்.. கொடுங்கப்பா..."

தானாய் தன்னையறியாமலே.. சொன்னாள் சுமதி.

அதே.. நேரம்...

பாஸ்கர் வீடு.

வீட்டுக்கு வந்து முகம் கழுவி.. சேரை எடுத்து மொட்டைமாடியில் போட்டு... காற்று வாங்கியவாறு... ஆகாசத்தையே வெறித்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

அவனுக்கு. சுமதியின் அப்பா... குணசேகரிடம் பேசியது... தவித்த அவனது மனதிற்கு ரொம்ப ஆறுதலளிப்பது போல் இருந்தது. எப்படியும் அவர் சம்மதம் கொடுத்துவிடுவார் என்றே நம்பினான். மனம் அப்படியே இலகுவாய் பஞ்சாய் மாறி காற்றில் மிதப்பது போல் உணர்ந்தான். நீலமான வானில்... தத்தம் கூட்டுக்கு கூட்டமாய் திரும்பிக் கொண்டிருந்த... வெள்ளை பறவைகள் எல்லாம் மாலைச் சூரியனின் இதமான மஞ்சள் வெயிலில் அற்புதமான காட்சியாய்த் தெரிந்தது. ரொம்பவும் ரசித்துப் பார்த்தான். அவன் மனதில் தேறாய் வீற்றிருந்த காதல் வாகனத்திற்கு யாரோ வடம் பிடித்தார்கள். வாகனம்... ஊர்ந்து போக ஆரம்பித்தது. -அப்படியே பறவையாய்... காற்றில் பறப்பது போல் உணர்ந்தான் பாஸ்கர்.

ஆனால்... மறுபடியும்.., வாகனம் ஸ்தம்பித்தது.

பாஸ்கரை திடுமென அந்தக் கேள்வி தாக்கியது.

ஆமாம்... எல்லாம். சரி.. இதை.. நம்.. வீட்டில்.. அம்மாவிடம் சொல்ல வில்லையே...

இவ்வளவு தூரம்.. வந்தாகிவிட்டது... இனிமேலும் சொல்லாமல் மறைத்துக் கொண்டு.. எப்படியும் சொல்லியாக வேண்டுமே...?

பாஸ்கர் யோசித்தான். அன்று இரவே அம்மாவிடம் சொல்லுவது என தீர்மானித்தான். அன்று இரவு... எல்லோரும் தூங்கிய பிறகு... தனியாய் அம்மாவிடம் பேச ஆரம்பித்தான் பாஸ்கர்.

"அம்மா... உங்ககிட்ட ஒரு.. முக்கியமான விஷயம்..."

"சொல்லுப்பா!.."

சாதாரணமாய் ராஜம் கேட்டாலும்.. இந்த அர்த்தராத்திரியில் முக்கியமாய் அப்படி எதைச் சொல்லப் போகிறானோ... என்ற பயம் உள்ளூர அவளைப் பிடித்து உலுக்கியது.

"திடீர்ன்னு.. இப்படி.... ஒரு விஷயத்தைச்.. சொல்றேன்னு... நீங்க.. பயந்திடக் கூடாது... "பீடிகையுடன் ஆரம்பித்தான் பாஸ்கர்.

ராஜம்.. . விஷயம் ஏதோ... விபரீதம் என்று நடுங்கியே விட்டாள். இருந்தாலும் வெளிகாட்டவில்லை. "சொல்லுப்பா.. அப்படி என்ன விஷயம் சொல்லப் போற...?" என்றாள்.

"அம்மா... என்னோட.... எதிர்காலத்தை... என்னோட கல்யாணத்தைப் பத்தி... நீங்க... என்ன அபிப்பராயம்.. வைச்சிருக்கீங்க... சொல்லுங்களேன்..."

விஷயத்தை.. மெல்ல... பூனை... போல் நகர்ந்து... நெருங்குவது என பாஸ்கர் முடிவெடுத்து முடிச்சின் நுனியில் பேச்சை ஆரம்பிக்க... ராஜம் டக்கென உடனே புரிந்து கொண்டாள். பாஷ்கரை.. பாஸ்கரின் இளமை வயதை உடனே தெரிந்து கொண்டாள்.

"யாரப்பா.. அந்தப் பொண்ணு...?" என்றாள் உடனடியாய் விஷயத்திற்கு வந்தவளாய்.

"அம்மா.. நீங்க.. எப்படி.."

"எனக்கு.. எல்லாம்... தெரியும்டா... உன்னோட இந்த வயசில நீ கல்யாணத்தை பத்தி பேசறீன்னா... எனக்குத் தெரியாதா...? யாரையோ.. நீ மனசில நினைச்சிருக்கேன்னு...

புரிஞ்சுக்க முடியாதா? சொல்லு.. யாரு அந்தப் பொண்ணு...?"

ராஜம் கேட்க பாஸ்கர் தயக்கம் முழுவதும் நீங்கியவனாய் சுமதி பற்றி அவள் அப்பா பற்றியென சகல விபரங்களையும் சொன்னான். முடிவில், "இப்போ சொல்லுங்கம்மா... உங்களுக்குச் சம்மதமா...? நான் அந்த சுமதியை கட்டிக்க நீங்க சம்மதிக்கறீங்களா...? என்றான்

ராஜம் ஒன்றும் தோன்றாதவளாய் தலையசைத்தாள்.

ஆனால் அவள் மனதில் வரப்போகிற மருமகள் எப்படி இருப்பாளோ..? என்ற பயம்.. பாஸ்கரை நம்பியிருக்கும் தம்பி தந்தைகளின்.. எதிர்காலம் என ஒவ்வொன்றும் வரிசையாய்... கேள்விக்குறியுடன் தோன்றி அவளை திகைக்க வைத்தது.



## 5

சுமதிக்கு அது ஒரு இனம்புரியா தவிப்பாய் இருந்தது. தீர்க்கமாய் யோசித்து முடிவெடுத்தாலும்.. திரும்பவும் யோசி... என்றது மனது. இது கல்யாண விஷயம். உன்



எதிர்கால வாழ்க்கை முழுவதையும். நிர்ணயிக்கப்போகும் முக்கியமான சமாச்சாரம். அடித்துச் செல்லும் வெள்ளமாக இல்லாமல் அன்னத்துச் செல்லும் நீரூற்றாய் உன் வாழ்க்கை அமைய வேண்டும். யோசி, நன்கு.. யோசித்து ஒரு நல்ல முடிவை உறுதியாய் எடு... என்றது.

அப்பாவும் அதற்கேற்றார் போல், பாஸ்கரை... எனக்குப் பிடிச்சிருக்கு.. இட்.. இஸ்.. நௌவ்... யுவர்... சாய்ஸ்! இறுதி முடிவு.. உன்னோடது தான்..." என்று வேறு சொல்லி முழுப்பொறுப்பையும் அவளிடம் ஒப்படைத்திருந்தார்.

சுமதி.. யோசித்தாள்.

அவளுக்கு சட்டென அப்பா பாஸ்கர் குடும்பம் பற்றிச் சொன்ன நினைப்பு மனதில் ஓடியது. அப்பா.. சொன்னாரே.. பாஸ்கருக்கு.. இரண்டு தங்கை.. இரஷ்டு... தம்பிகள் என்று... பாஸ்கரின் அம்மாவைக் கூட.. பார்த்ததில்லையே...?

சிந்தித்தவளுக்கு.. ஏனோ அவனது குடும்பத்தைப் பற்றி முழுதும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது.

இன்று... இப்பொழுது... சென்று பார்த்தால்.. என்ன...? அவர்களையெல்லாம் சந்தித்துப் பேசினால் என்ன...?

மறுநிமிடமே உற்சாகம் கிளம்பியவளாய் பாஸ்கர் வீடு நோக்கி கிளம்பினாள். 'ஆபீஸுக்கு இன்று போகப் போவதில்லை. லீவு சொல்லிவிட வேண்டியதுதான்... சொல்லிவிட்டு... பாஸ்கர் நம் வீட்டுக்கு வந்தது போலவே நாமும். அவன் இல்லாத சமயமாய் வீட்டுக்குச் சென்று ஸர்ப்ரைஸ் விசிட் அடித்து விட வேண்டியது தான்.

மனதில் கணக்குப் போட்டவாறு சுமதி கிளம்பினாள்.

பாஸ்கர் வீடு.

சுமதி வீட்டை கண்டுபிடித்து உள்ளே நுழைந்த போது... பாஸ்கரின் தாய் ராஜம் வாசல் பக்கமே.. நின்று.. கொடியில் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள்..

சுமதியைப் பார்த்ததும் ஆச்சரியம் அடைந்தாள்.

"இது.. பாஸ்கர்.. வீடுதானே...?"

"ஆமா... நீங்க..."

"நான்.. சுமதி.. பாஸ்கரோட வொர்க் பண்றேன்.. பாஸ்க்ர்.. என்னைப் பற்றி... சொல்லியிருப்பாரே...?" என்றபடி சுமதி அழகாக புன்னகைத்து ஸ்நேகமாய்ச் சிரித்தாள்.

"ஓ.. ஆமா...! ஆமா...!" பட்டென ராஜத்திற்கு நேற்று இரவு பாஸ்கர் தன்னிடம் சொன்ன விஷயங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. தன்னுடன் வேலைபார்க்கும்.. பெண்ணைத்தான் தான் விரும்புவதாய்

சொல்லியிருந்தான்... அப்படியானால்.. இந்த சுமதி தான்.. அந்தப் பெண்ணோ...?

ஒரு... நிமிடம்.. நினைவுக்கு வந்தவள்.. வெளியே வைத்தே பேசிக் கொண்டிருக்கிறோமே என்ற குற்ற உணர்வில் அவசரமாய், "வாங்க.. வாங்க.. உள்ளே.. வாங்க..!", என்று வீட்டினுள் ராஜம் அழைத்துச் செல்ல... முயன்றாள்.

சுமதி அவசரமாய் ராஜத்தின் கையைப் பிடித்தவள், "என்ன.. இது.. என்னைப் போய்.. நீங்க.. நாங்கன்னு.. சொல்லிக்கிட்டு. நான் ரொம்பச் சின்னவள். உங்க மகள் மாதிரி. சும்மா.. வா.. போன்னே... கூப்பிடுங்க...!" என்றாள் ஒருவித உரிமையுடன் கண்டிப்பு கலந்து.

ராஜத்தை சுமதியின் அந்தப் பேச்சே.. ரொம்பவும் நெகிழ்த்திவிட்டது. படித்தவள்... வேலை பார்ப்பவள்... கை நிறைய சம்பளம் வாங்குபவள் எப்படி எப்படி இருப்பாளோ.. என்று நேற்று இரவு முழுவதும் தூக்கமின்றி சிந்தித்த அவளது பயத்தை.. சுமதியின் அந்த ஒரு வார்த்தை தவிடு பொடியாக்கிற்று. நல்ல பெண்தான். பாஸ்கர்.. சரியான பெண்ணைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான். மனதுக்குள் மகிழ்ந்து.. சுமதியை கண்குளிரப் பார்த்தாள் ராஜம்.

இதற்குள் சத்தம் கேட்டு யார் வந்திருக்கிறார்கள்.. என்ற ஆவலுடன் பாஸ்கரின் தங்கைகள் ராதாவும் சுகன்யாவும் வெளிப்பட...

ராஜம் அவர்களுக்கு சுமதியை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

கைகூப்பினார்கள் அவர்கள். புதுஸாய் அவளைப் பார்த்த ஆச்சர்யத்தில் பயந்து லேசாய் சிரித்தார்கள்.

அவர்களை உரிமையுடன் பக்கத்தில் கூப்பிட்டு வைத்து படபடவென அவர்களுடன் பேச ஆரம்பித்து விட்டாள் சுமதி. அவர்களைப் பற்றி.. அவர்களது.. படிப்பு.. பொழுதுபோக்கு.. பொதுவிஷயங்கள் என ஒன்று விடாமல் எல்லாவற்றையும் அக்கரையாய் விசாரித்தாள். தன்னைப் பற்றி.. அப்பாவைப் பற்றி... ஆபீஸ் விஷயங்கள் பற்றி என்று அத்தனையையும் சொன்னாள்.

உள்ளே அவசர அவசரமாய் சென்று காபி பொடி கலந்து சூடாய் காபியை கொண்டு வந்த ராஜமே... சுமதியின் அந்த பழகும் லாவகம் குறித்து வியந்துவிட்டாள். ஒரு சிலருக்குத்தான் அபூர்வமாய் இந்த சுபாவம் இருக்கும். எடுத்த எடுப்பிலே.. உரிமையாய்.. எந்தவித போலித்தனமும் இல்லாமல் யதார்த்தமாய்... நீண்ட... நாள். குடும்பத்தோடு பழகியது போல் பேசும், லாவகம் இருக்கும்.. சுமதியிடம் அந்த லாவகம் இருந்தது. அவளிடம் பேசவும் நிறைய விஷயங்கள் இருந்தது. ராதாவும் சுகன்யாவும் வைத்த கண் மாறாமல் அவளது பேச்சையே கவனித்துக் கொண்டிருந்தனர். இதையெல்லாம் கண்குளிரப் பார்த்த.. ராஜத்திற்கு.. சுமதியை ரொம்பவும்



பிடித்துப் போனது. அவளை.. வேறு.. பெண்ணாய்.. மூன்றாம் நபராய் அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஏதோ... தன் குடும்பத்து நபராய்.. தன் குடும்பத்தில் ஒருவள் போல் அவளால் நினைக்க முடிந்தது.

'பாஸ்கருக்கு இவள் சரியான ஜோடிதான்... பாஸ்கர்-இவளை அடைய கொடுத்து வைத்தவன் தான்..'

இறுதியாய் அந்த முடிவிற்கு ராஜம்... உறுதியாய் வந்தபோது... சுமதி தன் பேச்சை முடித்திருந்தாள்.

"அப்ப.. நான் வரட்டுமா... கிளம்பட்டுமா...?" என்றபடி சுமது எழுந்தாள். எல்லோரும் பிரிய மனமில்லாதது போல் அவளைப் பார்த்தனர். சுமதி ஸ்நேகமாய் சிரித்து... இன்முகத்துடன் விடைபெற்று வீட்டுக்குக் கிளம்பினாள்.

வாசல்வரை வந்து வழியனுப்பி அவள் போவதையே.. பார்த்துக் கொண்டிருந்தனர் மூவரும்.

சுமதி வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். மனம் முழுவதும் கொஞ்ச நேரத்திறகு முன் பாஸ்கர் வீட்டில் பேசியதைப் பற்றியே நினைத்து அசைபோட்டுக் கொண்டிருந்தது. பார்த்த மாத்திரத்திலே டக்கென அவளுக்கு அந்த வீட்டுச் சூழ்நிலை ரொம்பவும் பிடித்துப் போனது. சொல்லப்போனால்.. அவள் சிறுவயதிலிருந்து.. தாய். தங்கை தம்பி.. என மற்ற உறவுகளைப் பற்றி அறிந்ததில்லை. அவளுக்கு ஆரம்பத்திலேயே அந்த பாக்யம் இல்லாது போயிற்று. நினைவுக்கு வந்ததும் அவளுக்குத் தெரிந்ததெல்லாம்... அப்பா... ஒன்றுதான்.. அப்பாவின் முகம் மட்டும் தான். சிறுவயதிலேயே தாயை வேறு நோயினால் பறி கொடுத்து விட்டதால் அப்பாதான் அவளுக்கு எல்லாம். தாய், தம்பி., தங்கை அண்ணன்.. என எல்லாம் அவர்தான். மற்ற உறவுகளைப் பற்றி உணர்ந்து கொள்ள அதன் சந்தோஷங்களைப் புரிந்து கொள்ள அவளுக்கு வாய்ப்பில்லாமலே போயிற்று. அவளும் அப்படியே வளர்ந்து விட்டாள்.

இன்று... அவள் சந்தித்த புதுவித சூழ்நிலை அவளுக்கு இனம் புரியாத லகரியை, இதுவரை அனுபவித்திராத உணர்ச்சியொன்றை மனதில் கிளப்பியிருந்தது. பள்ளிச் சிறுமியாய் ஸ்கூலுக்கு சென்ற நேரங்களில் சக மாணவ, மாணவியர்.. தங்கள் அக்கா... தம்பி.. தங்கையென ஒரு சேர கைகோர்த்து பள்ளிக்கு வருவதைப் பார்க்க அவளுக்கு ரொம்பவும் ஏக்கமாய் இருக்கும். தனக்கும் அதுபோல் அமையவில்லையே என்கிற வருத்தம் உள்ளூர.. வாட்டும். இப்பொழுது பாஸ்கர் வீட்டுக்குச் சென்று அங்கு அவர்களது... பாசப்பிணைப்பை பார்த்த பிறகு... அந்த ஏக்கம் திரும்பவும் அவளுள் உண்டாயிற்று.

இது போன்ற அரவணைப்புகளுடன், பாசப் பிணைப்புகளுடன் வாழ நமக்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் .முதலில் தான் இது போன்று

அமையவில்லை. இனியாவது.. அமைந்தால்...?-பாஸ்கரும் நல்லவர்தான்.. பின்... இதற்கு முடிவுதான்... என்ன..? சுமதி நடந்தவாறே தீர்க்கமாய் யோசித்தாள். அவள் மனது ரொம்பவும் தெளிந்து விட்டது போல் இருந்தது. இறுதியாய் பாஸ்கரை மணந்து கொள்ள அவளது மனது முழுதாய் சம்மதம் கொடுத்தது..



## 6

சுமதியின் கல்யாணம் நிச்சயமாயிற்று. அப்பா குணசேகருக்கு ஒரே சந்தோஷம். 'நல்லவேளை இப்பவாவது. கல்யாணத்துக்கு சம்மதிச்சியம்மே...' என்றார் மன மகிழ்ந்தவராய்.

அப்போதுதான் அந்த திடீர் கவலை வந்தவளாய் அப்பாவை கனிவுடன் பார்த்தாள் சுமதி.

"அப்பா..."

"என்னம்மா..?"

"எனக்கு... ரொம்ப சங்கடமா.. இருக்குப்பா..."

"ஏனம்மா..?"

"நான்.. கல்யாணமாகிப் போயிட்டா... நீங்க... தனியா... இந்த வீட்டுல என்னப்பா... செய்வீங்க...?"

சுமதிக்கு கண்கள் கலங்கி... நீர்த்துளிகள் துளிர்த்து விட்டன. குணசேகரும் சட்டென... வந்த கண்ணீரை அவசரமாய் துடைத்தபடி அவள் பக்கம் வந்தவர் கடகடவென சிரித்தார்.

"அம்மா.. சுமதி.. என்னை... என்னென்னு... நினைச்ச..? நான் ரொம்பவும் ஸ்போர்ட்டிவ் டைப். சின்ன வயசில இருந்தே மாற்றங்களை சந்திக்கிறது... ஜீரணிக்கிறது. எல்லாம் எனக்கு பழக்கமாய் போயிற்று. ஐ. கேன்.. ஃபேஸ்.. இட்...!"

"இருந்தாலும்.. அந்த.. அந்த.. தனிமை... ரொம்ப கொடுமைப்பா.. தனியா... இந்த வீட்டுல பேச்சுத் துணைக்குக் கூட ஆள்... இல்லாம..."

திரும்பவும் சுமதி கண்கலங்க... அவளது கண்ணீரை அவசரமாய் துடைத்து... அவளது இரு தோள்களையும் உறுதியாய் தட்டி தைரியம் பொங்க அவளைப் பார்த்தார். குணசேகர். "நோ.. நோ.. மை.. சைல்ட்... நீ... இப்படியெல்லாம்... வீணா... நினைச்சு... கண்கலங்கக் கூடாது. நான் மிலிட்டரியில இருந்தவன்மா.. இந்த தனிமைக்கா பயப்படப் போறேன்... பி... போல்ட்... மை சைல்ட்...!"

நெஞ்சுறுதியுடன் திடமாய் பேசும் அப்பாவையே வியப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் சுமதி.



நாட்கள் நகர்ந்தது.

ஒரு நல்ல... சுபநாளில் நிச்சயிக்கப்பட்ட பாஸ்கர்-சுமதி கல்யாணம் விமரிசையாய் நடந்து முடிந்தது.

பாஸ்கருக்கு சுமதியைக் கைப்பிடித்ததில் அப்பட்டமாய் சந்தோஷம். மணமேடையிலே முகத்தில் அது பளீரென பளிச்சிட... எப்போதும் சிரித்தபடி... இடையிடையே சுமதியின் செந்நிற அழகை ஓரக்கண்ணாய் பார்த்து வியந்தவனாய் இருந்தான்.

குணசேகர்... இது... தன் ஒரே மகள் கல்யாணம் என்றாலும்... பாஸ்கர் வீட்டுச் சூழ்நிலையை அனுசரித்தவராய், கல்யாணத்தை எந்த படோபஸ்தும் பண்ணாமல் சிம்பிளாய் ஒரு மண்டபத்தில் வைத்து நடத்தினால் போதும் என்ற முடிவுக்கு வந்திருந்தார். அதன்படியே கல்யாணமும்.. நகரின் மையமான மண்டபம் ஒன்றில் ரொம்பவும் தெரிந்தவர்கள் வேண்டப்பட்டவர்கள் படை சூழ.. இனிதே.. நடந்தேறியது.

அன்று... முதலிரவு.

இரவில்... தன்னைத்தேடி... வெட்கம் பொங்க... நாணிக் கோணி வந்த சுமதியை அவசரமாய் கட்டிலில் உட்கார்த்தி வைத்து. கண் அசையாமல் அவளையே பார்த்தான் பாஸ்கர்.

என்ன... அப்படிப் பார்க்கறீங்க...?"

"என்னால்... நம்பவே... முடியல... சுமதி..."

சுமதி சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்.

"நம்ம.. நம்ம... கல்யாணம்... இவ்வளவு சீக்கிரம் நடக்கும்ன்னு.. நான் நினைச்சு... கூட... பார்க்கல..."

"அப்படியா...? இதிலென்ன... ஆச்சரியம் இருக்கு...?" என்பது போல் சுமதி அவனைப் பார்த்தாள்.

"சுமதி.. நானும் உலகம் தெரிஞ்சவன்தான்... எனக்கும் ஊர் நடப்பு தெரியும்... இந்த காலத்தில்.. என்னை... மாதிரி.. ரெண்டு.. தங்கச்சி.. ரெண்டு தம்பின்னு... குடும்பப் பொறுப்பு... குடும்பச்சுமை... உள்ளவனுக்கு பொண்... கொடுக்கணும்ன்னா... பொண்ணு வீட்டுல... ரொம்ப யோசிப்பாங்க. கொடுக்கத் தயங்குவாங்க... அப்படி... இருக்கையில... நீ... நீ..."

மேற்கொண்டு பேச்சுவராதவனாய் நெகிழ்ச்சியுடன் பாஸ்கர் பார்க்க.. சுமதியும் அவனது நெகிழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து மனம் குளிர அவனைப் பார்த்தாள்.

"நீங்க.. சொல்றது.. சரிதான்!.. ஆனா... நான்... உங்க... தம்பி தங்கைகளை குடும்பச் சுமையா... பாரமா... நினைக்கலீங்க.. நான்.. செஞ்ச பெரும் பாக்யமா... நினைக்கிறேன்.."

"புரியலையே... சுமதி..."

"ஆமாங்க..!" என்றபடி சுமதி சொல்ல ஆரம்பித்தாள். தானும் அப்பாவும் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி.. தான் அம்மா.. தம்பி.. தங்கையென குடும்பப் பாசங்களுக்கு... ஏங்கியது... பற்றியென விலாவாரியாய் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னாள்.

நிஜமாகவே மனமகிழ்ந்து போனான். பாஸ்கர்.

"ரொம்பவும்... சந்தோஷமா... இருக்கு சுமதி... உண்மையைச் சொல்லப் போனா... என்னோட குடும்ப விஷயத்தில் எனக்கு ரொம்ப பயமா இருந்துச்சு.. எங்க.. உனக்கு சலிப்பு தட்டியிருமோன்னு கொஞ்சம் பயமாகூட இருந்துச்சு.. இப்போ எனக்கு எந்தப் பயமும் இல்ல..!"

பயம் நீங்கி... தன் வெண்பற்கள் தெரிய சிரித்தான் பாஸ்கர்.



## 7

சுமதிக்கு அது புது அனுபவமாய் இருந்தது.

ஒவ்வொரு நாளும் கண் விழிக்கும் போதே ஒரு புத்துணர்வு அவளையறியாமலே... மனதுள் ஏற்பட்டது... மேலும் ஐந்து ஐந்தரை ஆகிவிட்டால் போதும். அந்த அதிகாலையிலே விழிப்பு தட்டி விடும். படபடவென எழுந்து. குளித்து முடித்து.. ஈரத்துண்டால் கூந்தலை... இறுக மூடிகொண்டு காரியங்களில் இறங்கிவிடுவாள்.. வாசல் தெளித்து.. கோலம் போடுவதில் ஆரம்பித்து.. காபி.. போடுவது.. காலை டிபன் ரெடி பண்ணுவது.. என... எல்லாம் அவளது கைங்கரியம்தான்.

ராஜத்திற்கு ஒரு புறம் ஆச்சரியமும் சந்தோஷமும் வழிந்தாலும்.. நல்ல வசதியுடன் வாழ்ந்தவள்... மருமகளாய் வந்ததும் இப்படியெல்லாம் ஆகலாமா... என்ற நினைப்புடன் தடுத்துப் பார்ப்பாள்.

ஆனால் சுமதி பிடிவாதமாக, 'விடுங்கோ! எவ்வளவு நாள் எவ்வளவு வருஷம் இப்படி தினம் தினம் காலையிலே எழுந்து... நீங்க... வேலை... பார்த்திருப்பீங்க...? உங்களுக்கு கொஞ்சம் ரெஸ்ட் வேண்டாம்...? எல்லாத்தையும் நான்.. பார்த்துப்பேன்...!'' என்று அன்புக் கட்டளையிடுவாள். அதற்குமேல் ராஜத்தாள் ஒன்றும் செய்ய முடியாது... ஆயாசமாய் உட்கார்ந்து சுமதி வேலை செய்வதை கண் குளிரப் பார்ப்பாள். இந்தக் காலத்தில் இப்படியொரு மருமகளா....? என்று வியப்பாள்.

மணி ஆறு... ஆறறை ஆனதும்... சுமதி கையில் காபி தம்ளருடன் பாஸ்கரின் தங்கைகளை எழுப்புவாள்.

மன்னியைக் கண்டதும் தான் தாமதம்... ராதாவும் சுகன்யாவும் பரக்க பரக்க விழித்துக் கொள்வர்.

"குட்மார்னிங்! குட்மார்னிங்.. மன்னி...!"



"வெரி.. குட்மார்னிங்..! இந்தாங்க.. காபி..!"

சுமதி நீட்டும் காபியை வாங்கி கொண்டே குற்ற உணர்ச்சியோடு வாங்கிக் கொண்டு பார்ப்பார்கள்.

"ஸாரி... மன்னி... ரொம்ப... நேரம்... தூங்கிட்டோம்..."

"பரவாயில்லை.. எழுந்து... ரெடியாகுங்க...!" முகம் மலரச் சொல்லி சிரிப்பாள் சுமதி.

பின். பாஸ்கரின் தம்பிகள் பக்கம் போவாள்... கணேஷும் தினேஷும் ஆழ்ந்த் உறக்கமாய் இருக்க.. அவர்களையும் எழுப்பி ஸ்கூலுக்கு ரெடியாகச் செய்துவிட்டு.. திரும்பவும் கிச்சனுள் எழுந்து டிபனை செய்து முடிக்க... எப்படியும் மணி எட்டு எட்டரை ஆகியிருக்கும்.

அதற்குள் பாஸ்கரும் கண்விழித்திருந்திருப்பான்.

அவனுக்கு... காபி... காலை பேப்பர் என எல்லாவற்றையும் கொடுத்து.. ஷேவிங் க்ரீம்... ப்ரஷ்... எல்லாவற்றையும் ரெடி செய்துவிட்டு. திரும்பவும் அரக்கப் பரக்க.. வேலைகளில் ஆழ்ந்துவிடுவாள்.

இப்படி... பம்பரமாய் இயந்திரமாய் சுழன்று கொண்டிருப்பது. சுமதிக்கு வாடிக்கையாயிற்று ஆனால்... பாஸ்கருக்கு... இதையெல்லாம் பார்த்தபோது ரொம்பவும் பற்றிக் கொண்டுதான் வந்தது. இவள்.. ஏன்.. இப்படி விழுந்து விழுந்து.. செய்ய வேண்டும்...? வேலைக்குப் போகும் பெண்.. இப்படி வீட்டு வேலை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா...? அம்மா.. அம்மாவுக்கு... என்னாயிற்று...? இவ்வளவு நாளும் அம்மாதானே.. செய்து சுமதியிடம் ஏதும்.... சொல்லியிருப்பாளோ...?

யோசித்த பாஸ்கருக்கு தேவையில்லாமல் அம்மாவின் மேல் கோபம் கோபமாய் வந்தது. ஒரு நாள் அடக்கமுடியாமல் பால் தம்ளரை கொண்டு வந்த சுமதியிடமே கேட்டுவிட்டான்.

"சுமதி.."

"என்னங்க..."

"ரொம்ப நாளாவே... உன்கிட்ட கேட்கணும்ன்னு நினைச்சேன்... நீ.. ஏன்... இப்படி எல்லாத்தையும் உன் தலையில் எடுத்துப் போட்டுக்கிட்டு மாய்ஞ்சு... மாய்ஞ்சு... வேலை.. செய்யுற...? என்ன... காரணம்... அம்மாதான் உன்னை செய்யச் சொல்றாங்களா... சொல்லு..?" என்றான்.

'ஐய்யய்ய்யோ...!' என்று பயந்தே விட்டாள் சுமதி.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லீங்க...! அதை எல்லாத்தையும் நானே... விரும்பித்தான்.. சந்தோஷமாச் செய்யறேன். சொல்லப்போனா நான் எனக்குப் பிடிக்கும் நானே செய்யறேன்னு வலுக்கட்டாயமா எல்லாத்தையும் செய்வேன்ங்க.

"அதான்... ஏன்.. ஏன்னு... கேட்கிறேன்.. சுமதி..."

"எஙக்குப் பிடிச்சிருக்குங்க..."

திரும்பவும் சுமதி அதே பதிலைச் சொன்னாள்

புரியாமல் அவளைப் பார்த்தான் பாஸ்கர்.

அதன் பின் இரண்டு நாள் கழித்து மற்றொரு சம்பவம் நடந்தது.

அன்று...

பாஸ்கர் மாலை... வெளியே யாரோ ஒரு நண்பரை பார்த்துவிட்டுத் திரும்பியிருந்தான். திரும்பியவன் வழக்கம்போல் நேராய் மொட்டைமாடிக்குப் போய் சேரில் ஆகாயத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்து கொண்டான்.

சுமதி அவன் வந்ததை உணர்ந்து அவசர அவசரமாய் பில்டரை இறக்கி பால் கலந்து காபியுடன் அவன் முன் போய் நின்றாள்.

மாலை கழிந்து இரவை நெருங்கிக் கொண்டிருந்த வேளையானதால் மெல்ல இருட்டிக் கொண்டிருந்தது.

கீழே... அம்மா பூஜையறையில் ஸ்லோகம் சொல்லியவாறு இருக்க.. சுகன்யா ராதா... கணேஷ் தினேஷ் எல்லோரும் தத்தம் படிப்பில் பாடப்புத்தகங்களில் ஆழ்ந்திருந்தனர்.

"உட்கார் சுமதி..."

அந்த மங்கிய ஒளியில்... ஆகாயத்து மினுக் மினுக் நட்சத்திரங்களுக்கு நடுவே... நிலவு போல் தெரிந்த சுமதியின் முகத்தை அவளது அழகை பார்த்து வியந்தவாறே நெகிழ்ச்சியுடன் சொன்னான் பாஸ்கர்.

சுமதி உட்கார்ந்தாள்.

அவன் தன்னையே வைத்த கண் மாறாமல் பார்ப்பதைக் கண்டு அவளும் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள்.

"என்ன... அப்படிப் பார்க்கறீங்க...?"

பாஸ்கர் அவளைப் பார்த்து ஆழமாய்ப் புன்னகைத்தவன்,'' ஒண்ணுமில்ல..." என்றவாறே தன் இடுப்புப் பக்கம் கைவிட்டு வேஷ்டி மடிப்பில் முடிந்து வைத்திருந்த அதை-தான் யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்த பொட்டலத்தை எடுத்தான்.

என்னங்க... அது...?

"நீயே பிரிச்சுப் பாரு...."

பாஸ்கர் அவள் கையில் அந்த சின்னப் பாக்கெட்டைக் கொடுத்தான். சுமதி புரியாமல் அந்தப் பாக்கெட்டை வாங்கிப் பிரித்தாள். உள்ளே சுடச்சுட இருந்தது அல்வா.

சுமதி வியப்பாய் பார்த்தாள்.

"என்னங்க.. கொஞ்சமா.. வாங்கியிருக்கீங்க.. எல்லாத்துக்கும்.. எப்படிக் காணும்... இது... நீங்க..."



"சுமதி வார்த்தையை முடிப்பதற்குள்.. அவசரமாய் தடுத்துப் பேசினான் பாஸ்கர்.

"எல்லாத்துக்கும் இல்ல.. சுமதி..."

"பின்ன....?"

"உனக்கு.... உனக்கு... மட்டும்தான்! உனக்காகத்தான்... நான்... வாங்கிட்டு வந்திருக்கேன்..."

"எனக்காகவா... என்னங்க.... சொல்றீங்க...?"

"ஆமா... சுமதி.. நம்மோட.... வசதிக்கு... எல்லோருக்கும் சேர்த்து வாங்கி சாப்பிடணும்ன்னா... கட்டுப்பிடியாகாது... அதான்... உனக்கு... மட்டும்தான் இது..! நீ... மட்டும்... சாப்பிடு... சுமதி...!"

பாஸ்கர் தீர்க்கமாய்... உறுதியாய் பேசியதை... சுமதி உணர்ந்து கொள்ளாமலே பதிலுக்குப் பேசினாள்.

"என்ன... சொல்றீங்க...? நான்... மட்டும் சாப்பிடவா...? நல்ல... கூத்து தான்...! சிறுசு... சிறுசா... எல்லாத்தையும் வைச்சுக்கிட்டு.... பெரியவா... நான் மட்டும் தடிமாடு... மாதிரி... அல்வாவை விழுங்கச் சொல்றீங்களா... நல்ல வேடிக்கைதான்... போங்க...!" என்றபடி சுமதி எழுந்தாள்.

அவளது பேச்சை, செய்கையைக் கண்டு பாஸ்கர் துணுக்குறறான்.

"என்ன.. எல்லாத்துக்கும்... கொடுக்கப் போறீயா... சுமதி...?

"ஆமாங்க...! இருக்கிறதை எல்லோரும் பகிர்ந்துக்குவோம். அப்பதான் சந்தோஷமா இருக்கும்... கொஞ்சமா அல்வா சாப்பிட்டாத்தான் இனிப்பும் தித்திப்பா இருக்கும்...!"

சுமதி சொல்லியபடி சிரித்தவள்... பாஸ்கர் மௌனமாய் இறுக்கமாய் இருப்பதைக் கண்டு திகைத்தாள்.

"என்னங்க... யோசிக்கறீங்க...?"

"ஒண்ணுமில்லை.. உன் இஷ்டம்...!" பாஸ்கர் விட்டேத்தியாய்ச் சொன்னான்.

சுமதி கையில் அல்வாவுடன் கீழே... எல்லோருக்கும் கொடுக்க இறங்கிச் செல்வதையே வெறித்துப் பார்த்தான்.

அவனுள் தேவையில்லாமல் ஒரு வெறுப்பு துளிர்விட்டு படபடவென மனதுள் வேகமாய் வளர ஆரம்பித்தது.

## 8



பாஸ்கர் மனதுள் அந்த எண்ணத்தை தீவிரமாக கொண்டிருந்தாலும் அதைக் கொஞ்சமும் வெளிகாட்டவே இல்லை. ரொம்பவும் ஜாக்கிரதையாகவே இருந்தான். வீணாய் அவசரப்பட்டு காரியத்தை கெடுத்துவிடக் கூடாது

ஊர்ப்பழிக்கு ஆளாகிவிடக் கூடாது என்ற பயம் வேறு அவனுக்கு இருந்தது. அதனால் தனது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் ரொம்பவும் சாதுர்யமாய்த் தான் செயல்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டான்.

சுமதியின் போக்கு வேறு அவனை ரொம்பவும் கவலைகொள்ளச் செய்தது. சுமதி நாளுக்கு நாள்.. அவனது குடும்பத்தாரோடு நெருங்கி.. கிட்டத்தட்ட அந்தக் குடும்பத்து மூத்த பெண் போலவே ஆகிவிட்டாள். தினமும் காலை விடிந்துவிட்டால், 'மன்னி.. இந்த கணக்கை கொஞ்சம் விளக்கிச் சொல்லிக் கொடுங்களேன்.. மன்னி... மன்னி... இந்தப்ளூ தாவணி சட்டைக்கு மேட்ச்சாகுதா மன்னி..' என தம்பியும் தங்கைகளும் நொடிக்கொருதரம் அவளையே கூப்பிட்டுக் கொண்டு... அவளையே சுற்றி வருவதைக் கண்டு.. பாஸ்கருக்கு.. எரிச்சல் எரிச்சலாய் வரும்.. அதைவிட சுமதி எதற்கும் முகம் கோணாமல்... அப்படியே அவர்களை அரவணைத்து பாசம் பொங்க செய்வது பேசுவது... அவனுக்கு மேலும் கோபத்தையும் எரிச்சலையும் கிளப்பும்.

பாஸ்கர் அடக்கிக் கொள்வான். அப்போதெல்லாம் அந்த நினைப்பு அவனுள் வரும். இந்த பிச்சாத்து.. நச்சரிப்பு.. எல்லாம் இல்லாமல் தானும்.. சுமதியும் மட்டும் ஒரு வீட்டிலிருந்து... வாழ்க்கை நடத்தினால் எப்படி இருக்கும்? அது எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்...? தானும்... சுமதி.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு.. எந்த வித... குடும்பச் சுமையோ... கவலையோ... இல்லாமல் இருந்தால்..

அப்படியொரு வாழ்க்கையை தனக்கு நினைத்துப் பார்ப்பதே... பாஸ்கருக்கு சுகமாய்... தேவலோக சொர்க்கமாய் இருந்தது. நாளடைவில் அப்படியொரு வாழ்க்கைக்காக அவன் ஏங்கவும் ஆரம்பித்துவிட்டான். விதியோ.. விதியின் சதியோ... பாஸ்கரின் ஏக்கத்தைப் போக்க காரியங்கள் சந்தர்ப்பங்கள் தானாகவே வர ஆரம்பித்தது. அதுவும் அவன் ஆபீஸ் மூலமாகவே. பாஸ்கர், சுமதி வேலை பார்க்கும் அந்த 'க்ரீன்வேஸ் எக்ஸ்போர்ட்' கம்பெனி பல இடங்களில் தனது கிளைகளைக் கொண்டது. வெவ்வேறு ஊர்களில் தனது வியாபாரத்தை விஸ்தரித்திருந்தது. தனது பிசினஸை மேலும் விரிவுப்படுத்தும் பொருட்டு புதிதாய் பெங்களூரில் கிளையொன்றை ஆரம்பிப்பதாய் அறிவித்திருந்தது. அப்படி புதிதாய் ஆரம்பிக்கப்படும் கிளையில்... புதிதாய் வேலைக்குச் சேர்ந்து பணியாற்றுபவர்களைவிட.. நல்ல அனுபவம் பெற்றவர்கள் பணியாற்றினால் சிறப்பாக இருக்கும் என எண்ணி சுற்றறிக்கையொன்றை எல்லா பிராஞ்சுகளுக்கும் அனுப்பியது. ட்ரான்ஸ்பரில் பெங்களூர் வந்து வேலை பார்க்க விருப்பமுள்ளவர்கள். உடனே விண்ணப்பிக்கலாம்.. என்றும்.. அவர்களுக்கு.. தங்கும் வீடு மற்றும் வசதிகள் ஆபீஸ் நிர்வாகம் சிறப்பாக அமைத்துத்தரும் என கவர்ச்சியான திட்டமாய் வாய்ப்பாய் அதை அனுப்பி அறிவித்திருந்தது. வழக்கம் போலவே.. பிராஞ்ச் மேனஜர்.. எல்லா ஸ்டாப்களையும் கூட்டி.. இந்த விஷயத்தைச் சொல்ல..



இந்த பெங்களூர் ட்ரான்ஸ்பர் விஷயத்தை கேட்ட பாஸ்கருக்கு மனதில் மின்னலடித்த மாதிரி இருந்தது. தான் எதிர்பார்த்த சந்தர்ப்பத்தை கடவுளாய் தேடி வந்து கொடுத்தாற்போல் உணர்ந்தான். அவனுள் வேதாளம் ஒன்று புதிதாய் உருவாகி... முருங்கை மரம் ஏற ஆரம்பித்தது. பாஸ்கர் யோசித்து... திட்டமிடலானான். சுமதிக்குத் தெரியாமல், 'தானும் சுமதியும்... பெங்களூருக்கு ட்ரான்ஸ்பரில் செல்ல விரும்புவதாய் பிராஞ்ச் மேனேஜரிடம் தெரிவித்து ரகசியமாய் ஏற்பாடுகளைச் செய்யலானான்'

## 9



பாஸ்கர் தன் ஏற்பாடுகளை ரகசியமாகவே செய்ய ஆரம்பித்திருந்தான். தானே மேனஜரிடம் பக்குவமாய்ப் பேசி சுமதிக்குத் தெரியாமலே... காரியங்களை... காய்களை சுளுவாய் நகர்த்தினான். மேனஜரும் பாஸ்கரின் பெயரையும் சுமதியின் பெயரையும் ட்ரான்ஸ்பர் செல்ல விரும்புவதாய் ரெக்மண்ட் செய்து ஹெட் ஆபீஸிற்கு ரிப்போர்ட் அனுப்பி விட....

பாஸ்கர் ரொம்பவும் குதூகலித்துப் போனான். கூடவே அவனுக்கு அம்மா... பற்றிய ஞாபகம் வந்தது. கடைசியில் அம்மா எதுவும்... அழுது அடம்பிடித்து.. ரகளை.. பண்ணிவிடக்கூடாதே.. என்ற பயம் அவனுக்குத் தோன்றியது.. அதையும் சமாளித்து விடலாம் என்ற எண்ணமும் கூடவே உபரியாய் அவனுள் தோன்றியது. முதலில் மாதந்தவறாமல் பணம் அனுப்புகிறோம் என்று உறுதி கூறி கிளம்பிவிட்டால் போதும்... பணம் வந்தால்.. என்று அவர்களும் விட்டு விடுவார்கள். பின்.. நமக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்காது. இலகுவாய் போய் விடும்.. பணப்பிரச்சனையை போகப் போக... கடைசியில் பார்த்துக் கொள்ளலாம்.... முதலில் சுமதியும்... நானும்... ஒரு புது வாழ்க்கையை... சந்தோஷமான வாழ்க்கையை தொடங்க வேண்டும்... அதுவே... போதும்..

பாஸ்கர் முடிவிற்கு வந்தான். ஆனாலும் ட்ரான்ஸ்பர் விஷயத்தை சுமதியிடமும் சொல்லவில்லை. ஆர்டர் நெருங்கி வரும்போது வீஷயத்தைச் சொல்லி. உடனே சம்மதிக்க வைக்கலாம் என்றும் மனதுள் கணக்கு போட்டு வைத்திருந்தான். ஆனால். மேனஜர் மாத்ரூபூதம் திடீரென ஒரு நாள் சுமதியிடம் இதுபற்றி கேட்க விஷயம் வெட்ட வெளிச்சமாயிற்று.

"சுமதி... கூடிய சீக்கிரத்தில்... உங்களுக்கு கிடைச்சிரும்... அப்புறம் பெங்களூர் தான் போஸ்ட் ரொம்ப கூலான சிட்டி...! ம்ம்... போயிட்டு வாங்க...!" மேனேஜர் திடீரென ஒருநாள் பாராட்டிச் சொல்ல அப்படியே திடுக்கிட்டுப் போனாள் சுமதி.

"என்ன... சார்... சொல்றீங்க..?"

"அதான்... சுமதி... ட்ரான்ஸ்பர் விஷயம்... நீங்களும்... உங்க ஹஸ்பெண்டும். பெங்களூர் பிராஞ்சுக்கு மாற்றம் கேட்டிருந்தது.. அதைத்தான்... சொல்றேன்...!"

"என்ன.. ட்ரான்ஸ்பர்.. கேட்டோமா...? ஒண்ணுமே புரியலேயே சார்...!" சுமதி விழிக்க ஆரம்பித்தாள்.

"என்னம்மா... அவரு பாஸ்கர்.. உங்ககிட்ட ஒண்ணும் விஷயம் சொல்லலையா...?" என்றபடி மேனேஜர் விலாவாரியாய் பாஸ்கர் தனியாய் வந்து ட்ரான்ஸ்பர் கேட்ட விஷயத்தை. அதற்காக இருவருக்கும் பாரத்தில் பூர்த்தி செய்து... ஹெட் ஆபீசுக்கு அப்ளை செய்தது என மேனேஜர் புட்டுப்புட்டு வைக்க..

அப்படியே அதிர்ச்சியாகிப் போனாள் சுமதி.

பாஸ்கரா... இப்படிச் செய்தது...? என்னிடம் கூட கேட்காமல் ட்ரான்ஸ்பர் கேட்கும் அளவுக்கு இப்போது என்ன அவ்சரம் என்ன அவசியம்...?

சில நாட்களாகவே பாஸ்கரின் போக்கில்.. நடவடிக்கைகளில் ஒரு மாற்றம் தெரிவதை கவனித்திருந்தாள். ஆனால்... அது... இந்த அளவிற்கு விபரீதமாய் கொண்டு போய்விடும் என அவள் கனவிலும் நினைக்கவில்லை.

ஏன்.. என்ன... காரணம்...?

பாஸ்கர்... ஏன்... திடீர் என இந்த முடிவெடுக்க வேண்டும்...? கூடப் பிறந்த தன்னையே நம்பியிருக்கும் தாய் தம்பி தங்கைகளை விட்டு விட்டு.. வேண்டுமென்றே ட்ரான்ஸ்பரில் மாற்றல் வாங்கிச் செல்ல வேண்டிய அவசியம்...?

பாஸ்கர்... எதற்காக... செய்தார்...? அவருக்கு... தனியாய் நாமும் மனைவியும் மட்டும் வாழணும்... என்ற ஆசை எப்படி உதித்தது..? இவ்வளவு நாள் ஒழுங்காய் பொறுப்பாய் இருந்தவர் இப்படி... மாறி... ட்ரான்ஸ்பர் செய்யுமளவுக்குப் போய்... யார்... யார்... காரணம்...?

சுமதியை கேள்விகள் துளைத்தன. தவித்தவளாய் மேனேஜர் ரூமை விட்டு வெளி வந்தாள். வெளியே... தன் பக்கத்து ஸ்டாஃப் கணேசனோடு ஏதோ அரட்டையடித்தவாறு ஹாய்யாய் பேசிக் கொண்டிருந்தான் பாஸ்கர். செய்வதையெல்லாம்... செய்துவிட்டு ஒன்றும் தெரியாத அப்பாவி போல். முகத்தில் களை வைத்துக் கொண்டு... ம்ஹூம் எப்படித்தான் இவர்களால் முடிகிறதோ...?

சுமதி வியந்தவாறு தனது சீட்டில் வந்து உட்கார்ந்தாள்.

இங்கு... இந்த... ஆபீஸ் டைமில் வைத்து கேட்க வேண்டாம். இரவு வீட்டில் இதுபற்றி கேட்டுக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தாள். தனது கவலைகளில் ஆழ்ந்தாள்.

அன்று... இரவு...



பத்து மணிக்கு பால் கொண்டு வந்து கொடுத்த சுமதி... பாலைக் கொடுத்துவிட்டு.. அப்படியே அவன் கால் மாட்டுப் பக்கம் உட்கார்ந்து கொண்டாள்.

பாஸ்கர் கட்டிலில் சாய்ந்து... புத்தகமொன்றை படித்தவாறு படுத்திருந்தவன் அவள் ஏதோ பேசப்போகிறாள் என்பதை உணர்ந்தவன் போல்... புத்தகத்தை கீழே வைத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

"என்ன... சுமதி...?"

சுமதி நிமிர்ந்து... கண்களில் இறுக்கம் தெரிய அவனை ஒருமுறைப் பார்த்தாள்.

"மேனேஜர்... எல்லாத்தையும்... சொன்னார்..."

சொல்லிவிட்டு அவன் முகக்குறிப்பை தீவிரமாய் ஆராய்ந்தாள்.

பாஸ்கரோ எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் இயல்பானவன் போல் சிரித்தான்.

"சொல்லிட்டாரா...? நானே... சொல்லணும்ன்னு... நினைச்சுக்கிட்டிருந்தேன்...

சுமதி...? அதுக்குள்ளே... அவரே முந்திக்கிட்டாரு..."

ஏதோ பெரிய ஹாஸ்யம் நடந்தது போல் பாஸ்கர்... சிரிக்க... சீரியஸாய் அவனைப் பார்த்தாள் சுமதி.

"எதுக்குங்க... இப்படிச் செஞ்சீங்க...? நமக்கு எதுக்குங்க... இப்போ.. ட்ரான்ஸ்பர்... நாம எதுக்காக பெங்களூர் போகணும்...?"

"எல்லாம் காரணமாத்தான்... சுமதி..."

"என்ன... காரணம்...?"

"சொல்றேன்... சொல்றேன்... சுமதி..." என்றபடி நீளமாய் இழுத்து பாஸ்கர் மூச்சுவிட்டுக் கொண்டு பாஸ்கர் பேச ஆரம்பித்தான்.

"சுமதி... நான் சொல்றதை... ரொம்பப் பொறுமையா கேட்கணும்... அப்பதான்... என்னோட ஆங்கிலை.. நான் திங்க் பண்ணுற கோணத்தை உன்னால் புரிஞ்சுக்க முடியும்..." பீடிகையுடன் ஆரம்பித்த பாஸ்கர் தொடர்ந்து..." சுமதி... வாழ்க்கைன்னா... அதில ஒரு மாற்றம் ஒரு... சுவாரஸ்யம் வேணும்... அப்பதான் அது நல்லா இருக்கும். இல்லாட்டி ரொம்பவும் போரடிச்சிடுக்கும்... மனசே வெறுப்பாகி அப்படியே ஒருவித சலிப்பு தட்டிரும்... சொல்லப்போனா... இப்போ... நான் அந்த நிலமையில்தான் இருக்கேன்... சுமதி... நீ... புரிஞ்சுக்கணும் சுமதி...!" பாஸ்கர் நிறுத்தினான்.

"புரியலைங்க... நீங்க... சொல்றதை என்னால புரிஞ்சுக்க... முடியல..." சுமதி அவனை விழித்துப் பார்த்தாள்..

பாஸ்கர் நிதானமாய் பெரிய நியாயத்தை பேசுபவன் போல் பேசினான். "சுமதி... என்னை... நம்பி... அம்மா... தம்பி... தங்கைன்னு ஒரு பெரிய

குடும்பச் சுமை.. இருக்குன்னு... எனக்குத் தெரியாம இல்ல... சின்ன வயசில இருந்தே கடவுள் என் தலைமேல ஏற்றி வைச்ச பாரம் அது. நானும் அப்படி என்னோட வாழ்க்கையில் ஒரு சுவாரஸ்யம் தேவை... அதுக்காகத்தான்.. அதனாலத்தான்... நான்.. இப்படியொரு ட்ரான்ஸ்பருக்கு இப்போ அப்ளை... செஞ்சேன்..."

சுமதி பேசுவது பாஸ்கர் தானா என்ற ஐயத்துடன் அவனையே உறுத்துப் பார்த்தாள். தன்னையே நம்பியிருக்கும் தாய் தம்பி தங்கைகளை காப்பாற்ற வேண்டியவன் சலிப்பு தட்டி விட்டது என்று... வேதாந்தம் பேசுவது போல் பேசினான்.

"என்ன... அப்படிப் பார்க்கிற... சுமதி...? நான் சொல்றது உண்மை... சர்வ நிஜம்... என்னை மாதிரி பாரம் சுமக்கிறவங்களுக்கு... தண்டிப்பா.. இந்த மாற்றம்... தேவை..."



## 10

சுமதி மறுநாள் வழக்கம் போல் ரெடியாகி தன் வேலைகளையெல்லாம் முடித்து ஆபீஸிற்குக் கிளம்பினாள். அவளால், உள்ளுக்குள் ரொம்பவும் இறுக்கமாய் உணர்ந்தாலும் கொஞ்சமும் தனது உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவளாய் நடந்து கொண்டாள். ராதாவும் சுகன்யாவும் விடாமல் நொடிக்கொருதரம் அவளை சுற்றி வந்து, ஏதாவது பேச அவளுக்கு ஏதாவது உதவி பண்ண துடித்துக் கொண்டிருந்தனர். ராஜம் அதற்குமேல் ஒரு படி போய் அவசர அவசரமாய் சுமதியின் டிபன் பாக்ஸை கழுவி ரெடி செய்தவள் அதை முடித்ததும் முன்புறம் சென்று.. சுமதியின் செருப்புகளை தேடியெடுத்து அவள் போட்டுச் செல்வதற்கு வசதியாய் நடைப்பகுதியில் ரெடியாய் வைத்து விட்டாள். இந்த காலத்தில்.. இப்படி... ஒரு... மாமியாரா...? சுமதி வியந்து போனாள்... எல்லாவற்றுக்கும் மேல் கடைக்குட்டி தினேஷ் தனது நோட்புக்கை விரித்தவாறு, "மன்னி... நான் கணக்கில நூறு மார்க் எடுத்திருக்கேன்... பாருங்க..." என்று மழலைக் குரலில் ஆவலாய் பேசியபடி அவளிடம்.. ஆர்வமாய் நோட்டைக் காட்ட சுமதி ரொம்பவும் நெகிழ்ந்து போனாள். அவனை அப்படியே வாரியெடுத்து அணைத்துக் கொண்டாள்.. அவளால் கண்ணீர் துளிர்த்து.

எவ்வளவு... அன்பாய்... பாசமாய் இருக்கும்... இந்தக் குடும்பத்தை அம்போவென தவிக்க விட்டு விட்டு போக பாஸ்கருக்கு எப்படி மனம் வந்தது...? இவர்களும் தான் என்ன ஆவார்கள்...? இவர்களால்தான்.. தாங்கிக் கொள்ள முடியுமா...? இல்லை... அப்படியொரு வாழ்க்கையைத் தான் இவர்களால் நினைத்துப் பார்க்க முடியுமா..?



மனம் முழுவதும் பாரம் ஏறியவளாய் கலங்கிப் போன கண்களுடன் ஆபீஸிற்கு கிளம்பினாள் சுமதி.

அன்று.. ஆபீஸிலும் அவளுக்கு அதே நிலை தொடர்ந்தது. வேலைகளில் கவனம் செலுத்த முடியாமல் அது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்..

இவ்வளவு... நாள்.. பொறுப்பாய்... தன் குடும்பத்திற்கு உழைத்த பாஸ்கருக்கு திடீரென ஏன்... இந்த நினைப்பு வந்தது...? எதற்காக இந்தச் சலிப்பு... மனசில் தட்டி விட்டது... நான்... நான்தான் காரணமா...? கல்யாணமாகி... நான் மனைவியானதும் சில சராசரி ஆண்கள் போல... தான்.. தன்.. மனைவி.. தன் குடும்பம்... என சுயநலமாய் சிந்திக்க ஆரம்பித்து விட்டாரோ...? என்னமோ சொன்னாரோ... ஏற்பாடு எல்லாம் செஞ்சாச்சு... பேங்கில் பணம் அது... இதுவென்று... அதெல்லாம்... சும்மா... வெறும் ஜம்பம்தான்... எனக்காக... பிரச்சனையை சமாளிக்க இவர்... போடும் வேஷம்தான்... போலித்தனம் தான்... அப்படித்தான் இருக்க வேண்டும்... ஏனென்றால் பாஸ்கருக்கு இந்த சுயநல எண்ணம் மனதில் விஷமாய் வந்தாயிற்று... இனி... அதை அடைய அவரை அது... எதுவானாலும் பேசச் சொல்லும்... என்ன... போலித்தனம் வேண்டுமானாலும்... பண்ணச் சொல்லும்... என்ன..: செய்ய..?

'எப்படி... இதை... நிறுத்த..? பாஸ்கர் மனதில் இந்த சுயநல எண்ணத்தை மாற்றி பெங்களூருக்கு ட்ரான்ஸ்பராவதை எப்படியாவது நாம் தடுத்தாக வேண்டுமே...? படபடவென யோசித்த சுமதிக்கு டக்கென மேனேஜரின் ஞாபகம் வந்தது. மேனேஜர் மாத்ருபூதம் ரொம்பவும் நல்லவர். சிறந்த குணவாதி. அவர் மூலம் வந்த ட்ரான்ஸ்பர் விஷயத்தை அவர் மூலமே தடுத்து விட்டால்..?

சுமதிக்கு தனது பிரச்சனைக்கு.. வழி.. சட்டென புலப்பட்டது போல் தோன்றியது உற்சாகமானாள்.

விஷயத்தைச் சொன்னதும் மாத்ருபூதம் சிரித்தார்.

"நான்... நினைச்சேன்... அன்றைக்கு பாஸ்கர் விஷயத்தை உங்ககிட்ட சொல்லாம இருந்ததை வைச்சே... யூகிச்சுக்கிட்டேன்.. சரி இப்போ நான்... என்ன.. செய்யணும்... உங்களுக்கு என்ன ஹெல்ப் வேணும் சொல்லுங்க... சுமதி...?" என்றார் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவராய்.

"சார்... நீங்கதான்... எப்படியாவது.. இந்த ட்ரான்ஸ்பரை தடுத்து நிறுத்தணும் பெங்களூர்க்கு நாங்க மாற்றலாகிப் போகாம பார்த்துக்கணும். சார்..."

"அது... முடியாதேம்மா... ரொம்ப... கஷ்டமேம்மா...!" என்றபடி மாத்ருபூதம் நெற்றியைச் சுருக்கியவர், "எல்லா டீட்டெய்ல்ஸையும் ஹெட் ஆபீசுக்கு அனுப்பிச்சாச்சே... சுமதி... இன்னும் ஒரு வாரத்தில் ஆர்டர் கூட வந்திருமே... நீங்க... ரொம்ப லேட்டா... வந்து... சொல்றீங்களே..." என்றபடி அவளைக் குழப்பமாய்ப் பார்த்த மாத்ருபூதம் திரும்பவும் குனிந்து கொண்டார். எதையோ தீவிரமாய் யோசித்தார்.

சுமதி அவரையே பார்ததுக் கொண்டிருந்தாள்.

மாத்ருபூதம் யோசித்துக் கொண்டிருந்தவர் பிரகாசமாய் நிமிர்ந்தார்.

"ஆங்... இப்பதான்... ஞாபகத்திற்கு... வருதும்மா... இந்தப் பிரச்சனைக்கு ஒ.. ந... வழி... இருக்கு..."

"என்ன.. வழி... சார்...?"

"நம்ம... அக்கவுண்ட் செக்ஷன்ல... டைப்பிஸ்ட் ஜெயந்தி கூட பெங்களூர்க்கு ட்ரான்ஸ்பர் கிடைக்குமான்னு ரெண்டு நாளைக்கு முன்னாலதான் என்கிட்ட கேட்டாங்க. நான் கூட ரொம்ப லேட்டாயிட்டது. ஏற்கனவே.. ஹெட் ஆபீஸுக்கு க்ளைம் பண்ணியாச்சு இனிமே முடியாதேம்மான்னு சொல்லிருந்தேன். ஆனா... இப்போ.. நீங்க பெங்களூர் போக வேண்டாம்ன்னு நினைக்கிறதால... உங்களுக்கு பதிலா.. அவங்க போக ஏற்பாடு பண்ணலாம்..."



## 11

"அப்படியா.. சார்..? எனக்கு.. ஜெயந்தி கேட்ட விஷயம் தெரியவே... தெரியாதே... அப்போ... அப்படியே.. செய்யலாமே.. சார்..?" சுமதி வியந்து கேட்க மாத்ருபூதம் திரும்பவும் யோசித்தவர். "ஆனா ஒண்ணு சுமதி.. இதனால உன்னோட ட்ரான்ஸ்பரை மட்டும் தான் என்னால தடுத்து நிறுத்த முடியும். பாஸ்கரோட... ட்ரான்ஸ்பர் அது பாட்டுக்கு நடக்கும்.. அவர்... பெங்களூர் போகத் தான் வேண்டியிருக்கும்...

"வேற... வழி... இல்லையா சார்...?"

"வழி.. இருக்கும்மா..' பாஸ்கர் நினைச்சாருன்னா... பெங்களூர்ல ட்யூட்டில ஜாயின் பண்ண ஒரு மாசத்தில.. 'எனக்கு பெங்களூர் பிடிக்கலே சென்னைக்கே திரும்பவும் மாத்திருங்கன்னு..' லெட்டர் கொடுத்தாப் போதும்... திரும்பவும் இந்த வந்திரலாம்.. அதில... நோ... ப்ராப்ளம்...?"

"அப்போ... என்ன.. ஸார்...? அப்படியே.. செஞ்சிருங்க.. எள்ன இப்போ.. பாஸ்கர் மட்டும் பெங்களூர் போக.. ஏற்பாடு பண்ணிட்டு... 'என்னை... நிறுத்திருங்க.. ஸார்... ஆனா... முக்கியமா.. ஒரு.. விஷயம்... ஸார்.. நீங்கதான் ஹெல்ப் பண்ணணும்..."

"சொல்லும்மா..."

"இந்த விஷயத்தை.. நான் உங்ககிட்ட பேசி ஏற்பாடு செஞ்ச இந்த ட்ரான்ஸ்பர் சமாச்சாரம் பாஸ்கருக்கு தெரிய வேண்டாம் ஸார். ஏதோ இயற்கையா கம்பெனியே... என்னை நிறுத்திட்டு.. டைப்பிஸ்ட் ஜெயந்திக்கு மட்டும் பெங்களூர் ட்ரான்ஸ்பருக்கு சாங்ஷன் பண்ணிய மாதிரி நீங்க சொல்லணும் ஸார்.. நீங்க.. செய்வீங்களா... ஸார்...?"



கண்டிப்பா.. கண்டிப்பாம்மா.. ஒரு.. நல்ல விஷயத்துக்காக பொய் சொல்றது.. தப்பே இல்லம்மா.. நான் விரும்புறது உன் மனசுப்படியே நீயும் உன் குடும்பமும் எந்தவித குறையும் இல்லாம சந்தோஷமா இருக்கணும்ன்னுதான்..' அதுக்காக... நான் எல்லாவித உதவியும் செய்யறேன்ம்மா.. ஷ்யூர்லி... ஐ... வில்... ஹெல்ப்...யூ...!"

மாத்ருபூதம் உறுதி கூறினார்.

சுமதி நெகிழ்ந்து கண்கலங்க அவரிடம் விடைபெற்று விட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

பெரிய பாரம் நீங்கியவளாய் இழுத்து மூச்சு விட்டாள். மனம் ரொம்பவும் லேசாகி காற்றில் பறப்பது போல் இருந்தது.

## 12



அடுத்த ஒரு வாரத்தில் பாஸ்கர் பெங்களூர் செல்வதற்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. பாஸ்கரும் விடாமல் எப்படியும் சுமதிக்கும் டிரான்ஸ்பர் வாங்கிவிட வேண்டும் இல்லையெனில் தனது பிளானெல்லாம் தவிடு பொடியாகிவிடும் என பயம் தோன்ற.. ஆபீஸுக்கு இரண்டு நாள் லீவு போட்டு விட்டு. ஹெட் ஆபீஸுக்கு சென்றான். யார் யாரையோ. தனக்கு வேண்டப்பட்டவர்களை யெல்லாம்போய் சந்தித்தான். சுமதிக்கு எப்படியாவது பெங்களூர்க்கு மாற்றல் வாங்கித்தரும்படி கெஞ்சாத குறையாய் பேசினான். திரும்பினான்.

அன்று ஊரிலிருந்து வந்தவனை மாலை ஆபீஸ் முடிந்து வந்த சுமதி ஆவலாய் எதிர் கொண்டாள்.

"என்னாச்சுங்க...?" என்றாள் குரலில் நிஜமான அக்கரை கொண்டவள் போல். பாஸ்கர் உதடுகளை வெறுமையாய் பிதுக்கினான்.

"எனக்கு.. பயமாத்தான் இருக்கு... சுமதி.. உனக்கு ட்ரான்ஸ்பர் கிடைக்குமோன்னு.. சந்தேகமாத்தான் இருக்கு.."

"ஏன்க..?"

"எல்லா.. ஆபீசர்களும் சரி.. சீனியர் மேனேஜர்களும்... சரி... பெங்களூர்ல பிராஜ் ஆரம்பிக்கிறதில.. அங்க பெரிய பெரிய பார்ட்டிக் கிட்ட பிஸினஸ் பிடிக்கிறதில தான் குறியா... ஆர்வமா இருக்காங்க... தவிர.. ஸ்டாப்ஸைப் பத்தியோ... அவங்க ட்ரான்ஸ்பரைப் பத்தியோ.. யாரும் கவலைப்படுவதா காணும்.. அதான் எனக்கு ஒரே.. எரிச்சலா... இருக்கு..."

பாஸ்கர் அலுத்தவாறு பேசினான்.

சுமதி அவனையே ஆழமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேர யோசனைக்குப் பிறகு பாஸ்கர் நிமிர்ந்தவனாக தீர்க்கமாய் அவளைப் பார்த்தான்.

"நீ... எதற்க்கும்.... கவலைப்படாத... சுமதி... எப்படியும் யார் காலைப் புடிச்சாவது.. நான் ட்ரான்ஸ்பர் வாங்கிருவேன்.. உன்னை பெங்களூர்க்கு கூட்டிப் போயிருவேன்... டோண்ட்... வொரி.. ஓ.கே..?

பாஸ்கர் சட்டென உற்சாகமாகி பெரிசாய் சிரித்தான்.

சுமதி தன் பங்கிற்கு தலையாட்டியவள் வலுக்கட்டாயமாய் உதடுகளில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள். நாட்கள் நகர்ந்தது.

அன்று... சனிக்கிழமை.. மாலை ஐந்து மணிக்கு பாஸ்கர் பெங்களூர் கிளம்ப வேண்டும். ஏற்கனவே முன்பே ட்ரெயினில் ரிசர்வ் செய்து வைத்திருந்தான். அன்று காலையிலிருந்தே பரபரப்பாய் பெரிய சூட்கேஸில் தனது உடமைகள், பவுடர், டூத்பேஸ்ட், ஷேவிங் கிரீம் என அவனே.. சுமதிக்கு வேலை கொடுக்க விரும்பாது... தேடியெடுத்து பாக் செய்ய ஆரம்பித்து விட்டான். உற்சாகமாய் கிளம்பிக் கொண்டிருந்தான்.

சுமதிக்கும் ஒருபுறம் வருத்தமாய்த்தான் இருந்தது. அவனைப் பிரிய வேண்டியிருக்கிறதே... என்று அடிக்கடி கண் கலங்கியது.

ராஜமும் அதே மனநிலையில்தான் இருந்தாள் போலும். அடிக்கடி சேலை முனையால் கண்களைத் துடைத்துக் கொண்டே இருந்தாள்.

ராதாவும் சுகன்யாவும் என்ன நினைத்தார்களோ.. அன்று காலேஜிற்கு லீவு போட்டு விட்டு.. அண்ணன் பாஸ்கர் கூடவே இருந்தார்கள். அவனுக்குத் தேவையான உதவிகளை ஓடியாடிச் செய்து கொண்டிருந்தனர். தம்பிகள் கணேஷிற்கும் சரி தினேஷிற்கும் சரி விஷயம் அவ்வளவு புரியவில்லையென்றாலும்.. பாஸ்கர் எங்கோ கிளம்பிச் செல்வதை உணர்ந்து... சுமதியையே சுற்றிச் சுற்றி வந்து, 'எங்க.. மன்னி... அண்ணன் கிளம்புறாங்க...? ஊருக்கு... எப்போ வருவாங்க...? என்று திரும்பத்திரும்ப கேட்டுக் கொண்டிருந்தனர். சுமதி அவர்களை ஆறுதல்படுத்திக் கொண்டிருந்தாள்.

மாலை ஐந்து மணி.

பாஸ்கர் எல்லோரிடமும் விடைபெற்று விட்டு கிளம்பினான். ட்ரெய்னில் ஏறுவதற்கு முன்பு கூட கலங்கிய சுமதியின் கைகளை ஆறுதலாய்ப் பற்றிக் கொண்டவன், "நீ.. எதற்கும் கவலைப்படாத சுமதி... எப்படியும் கண்டிப்பா... உனக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிருவேன்... என்று உறுதி கூறி சுமதியை மேலும் சங்கடப்படுத்தினான்.

ட்ரெய்ன் கிளம்பியது. பெங்களூரிலாவது இவன் மனம் மாறி.. உடனே... திரும்பி.. இவர்... இங்கே... வந்துவிடட்டும்... கடவுள் அப்படிச் செய்து விட மாட்டாரா...? என்ற நம்பிக்கையில் கையசைத்தாள் சுமதி.

பெங்களூர்



பெங்களூரில் பாஸ்கரின் ஆபீஸ் நகரின் மையப்புறமாகவே அமைந்திருந்தது. குவார்ட்டர்ஸ்.. இன்னும் வேலை முடிந்து ரெடியாகவில்லையாதலால் நிர்வாகமே அதுவரை ரூமிற்கு பெரிய லாட்ஜ் ஒன்றில் ஏற்பாடு பண்ணியிருந்தது. பாஸ்கர் ரூமில் தங்கிக் கொண்டான். பெங்களூர் அவனுக்குப் பார்த்த மாத்திரத்திலே ரொம்பவும் பிடித்துப் போனது. அந்த இதமான வெயிலும் ஏஸியில் இருப்பது போன்ற குளுகுளுக்ளைமேட்டும் அவனை ரொம்பவும் கவர்ந்திருந்தது. இதில் ஆபீஸ் க்வார்ட்டர்ஸ் வேறு.. பெங்களூரின் செழிப்பான.. சுற்றிலும் பெரிய பெரிய மரங்கள் அடர்ந்த பகுதியொன்றில் நிர்மானித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மரங்களும் விதவிதமான செடிகளும் வண்ண வண்ண பூக்களுமாய் நிறைந்து.. அந்த இடமே பார்ப்பதற்கு அழகாய்... சோலை போல் இருந்தது. தானும் சுமதியும் எந்த தொந்தரவில்லாமல் வசிப்பதற்கு ஏற்ற இடம் இதுதான் என பாஸ்கர் அதையெல்லாம் பார்த்தவன் நினைத்து மனமகிழ்ந்து கொண்டான். பரவசமானான்.

ஆபீஸில் வேலை தொடங்கி.. இரண்டு மூன்று நாட்கள் ஓடிவிட்டது.

புதியதாய் ஆரம்பிக்கப்பட்ட பிராஞ்ச் என்பதால் பாஸ்கர் செக்ஷனில் அவ்வளவாக வேலையில்லை. இருந்த ஒன்றிரண்டு வேலைகளையும் முடித்து.. சுமதியைப் பற்றியே... அவளுக்கு எப்படி மாற்றல் வாங்குவது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். ஹெட் ஆபீஸில் ஒரே பரபரப்பாய்த்தான் இருக்கிறார்கள். இப்போது இது பற்றியெல்லாம் சிந்திக்க அவர்களுக்கு நேரம் கிடையாது. பின்.. யாரைப் பார்க்க..? எப்படிச் செய்ய..?

யோசித்தவனுக்கு சட்டென மேனேஜர் ஞாபகம் வந்தது.

இங்கு.. பெங்களூர் கிளைக்கு அவனைப் போலவே புதிதாய் வந்து பொறுப்பேற்றிருந்தார் அந்த மேனேஜர். பார்ப்பதற்கு எப்போதும் கனிவாய் உதடுகளில் புன்முறுவலுடன் ரொம்பவும் நல்ல சுபாவமாய் தெரிந்தார் அவரையே அவரிடமே இது பற்றி கேட்டால் என்ன...?

பாஸ்கர் சிந்தித்தவன் ஒரு முடிவிற்கு வந்தான். அன்று மாலையே அவர் தனியாயிருக்கும் சமயமாய் அவரைச் சந்தித்தான்.

விஷயத்தைச் சொன்னதும் மேனேஜர் அவனை புதுஸாய்ப் பார்த்தார். உற்று நோக்கினார்.

"உங்களுக்கு விஷயம்.. தெரியாதா... பாஸ்கர்..?"

"என்ன... ஸார்..?"

"உங்க ஒய்ஃப் சுமதிக்கு இங்க பெங்களூர்க்கு மாற்றலாகி வர இஷ்டமில்லைன்னு எழுதிக்கொடுத்திருக்காங்க.. மேனேஜர் மாத்ருபூதம் தான் அந்த லெட்டரை பார்வர்ட் பண்ணிருக்காரு. ஸோ.. உங்க ஒய்ஃபுக்கு இஷ்டமில்லைன்னுதான். டைப்பிஸ்ட் ஜெயந்திக்கு நாங்க ட்ரான்ஸ்பர் ஆர்டர் கொடுத்தோம். தெரியாதா... உங்களுக்கு...? மேனேஜர்... சொல்லச்

சொல்ல பாஸ்கரின் முகம் மாறியது. ஒரே நேரத்தில் ஆயிரம் தேள்கள் வந்து கொட்டியது போல், கறுத்தது.



## 13

சுமதிக்கு அன்று... ஆபீஸில் ஒரே வெறுமையாயிருந்தது. மனதில் பல்வேறு சிந்தனைகள். குழப்பங்கள். தான் நினைத்தபடியெல்லாம் காரியங்கள் நடக்குமா...? பாஸ்கர் மனம் மாறுவாரு..? தனக்கு நிச்சயம் மாற்றல் கிடைக்காது என்பதை உணர்ந்து விட்டால்.. திரும்பவும். எனக்காக இங்கு வந்துவிட மாட்டாரா.. திரும்பவும் நாம் ஒரே குடும்பமாய் சந்தோஷமாய் வாழமாட்டோமா..? என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு ஒரு விஷயம் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பாஸ்கர்.. ஏன்... இப்படி மாறினார். மாற ஆரம்பித்தார்..? எப்போது... எதற்காக இந்த சுயநல எண்ணம் அவரை ஆட்கொண்டது...?

எனக்காகவா...? நான் அவருக்கு மனைவியாய் வந்த பிறகா...?

தனக்கென்று... ஒரு மனைவி... ஒரு குடும்பம் என்று ஆன பிறகா..?

ஆம்... அப்படித்தான் இருக்க வேண்டும். எனக்காக... என்னால் தான் அவருக்கு இப்படியொரு எண்ணம். சுயநலமாய் நாம்.. நமது குடும்பம் மட்டும்.. என்னும் பிரித்துப் பார்க்கும் மனம்..?

கூடாது... நாம்... நிச்சயம் இதற்கு காரணமாய் இருக்கக் கூடாது...

அம்மா... தம்பி.. தங்கையென சந்தோஷமாய் வாழ்ந்த குடும்பச் சூழல் பிரியக்கூடாது.. பிரிவுக்கு நான் காரணமாயிருக்கக் கூடாது.

எப்படியாவது... என்ன ஆனாலும்... சரி... பாஸ்கர் மனதை மாற்றிவிட வேண்டும்.. அவரின் அந்த விபரீத எண்ணத்தை போக்கி.. திரும்பவும் சந்தோஷமாய்... ஒற்றுமையாய் வாழ நாம் வழி வகுத்திட வேண்டும்...

சுமதி மனதிற்குள் திடமாகிக் கொண்டிருந்தாள். நாம் செய்வது சரிதானா..? என்று அவளை நச்சரித்த அந்த எண்ணம் அந்த குமைச்சல் அவளிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் விலகி உறுதி பிறந்து கொண்டிருந்தது. 'எல்லாம்... நல்லபடியாக நடக்க வேண்டும்... ஸ்வாமி..' என்று மனமுருக கடவுளை வேண்டி வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தாள்.

அதே.. நேரத்தில்..

மேனேஜர் சொன்ன விஷயத்தைத் கேட்டு துடித்து கோபத்தின் உச்சிக்கே சென்றிருந்த பாஸ்கர் உடனடியாக ஆபீஸிற்கு மதிய விடுப்பு சொல்லிட்டு பஸ்ஸை பிடித்து ஆத்திரத்தோடு சென்னைக்குக் கிளம்பியிருந்தான்.



இரவு பத்து மணி.

படபடவென வாசல் கதவு தட்டும் சப்தம் கேட்டு சுமதி பெட்ஷீட் விரித்து படுக்கப் போனவள் எழுந்து விட்டாள். ராஜமும் அசந்து தூங்க ஆரம்பித்திருந்தவள் சத்தம் கேட்டு விழித்து விட்டாள்.

யாராயிருக்கும் இந்நேரத்தில்...?

இருவரும்... யோசித்தபடி... கதவைத்திறக்க...

வெளியே... பாஸ்கர் கையில் சூட்கேஸுடன்.

பாஸ்கரைப் பார்த்தவுடன் சுமதி முகமலர்ந்தாள். "நீங்கள்தானா...? வாங்க.. வாங்க.." என்று உற்சாகமாய் அவனை வரவேற்க...

கடுகடுவென இறுகிய முகத்துடன் உள்ளே நுழைந்தான் பாஸ்கர்.

பாஸ்கரின் அந்த இறுகிய சுபாவத்தைப் பார்த்ததுமே சுமதிக்கு உள்ளுள்க்குள் திடுக்கென்றது. இருந்தாலும் அதை வெளிக்காட்டாதவளாய் இன்முகத்துடன் அவன் கையிலிருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டாள்.

பாஸ்கர் பெட்டியை அவள் கையில் கொடுத்தவன்... அதே கடுகடுப்பு... கொஞ்சமும் குறையாமல் விறுவிறுவென தன் ரூமிற்குள் நுழைந்து கொண்டான்.

ராஜத்திற்கு கூட கொஞ்சம் திகைப்பு வந்து விட்டது. முன்னால் குத்துக் கல்லாய் நிற்கும் தன்னிடம் கூட ஒரு வார்த்தை பேசாமல் விறுவிறுவென போயிட்டானே... என்ற ஆதங்கத்துடன் பார்த்தாள்.

அதை சட்டென புரிந்து கொண்ட சுமதி ராஜத்தை சமாதானம் செய்பவளாய், "பயணக் களைப்பா... இருக்கும்.. காலையில பேசிக்கலாம்.. நீங்க படுங்க... அத்த.." என்றாள்.

ராஜம் சென்றதும் கிச்சனுக்குச் சென்று பாலை சூடாக்கி.. அடுத்த ஐந்து நிமிடத்தில்... பால்தம்ளருடன் பாஸ்கர் ரூமினுள் சுமதி நுழைய.

அவள் வரவை எதிர்பார்த்தவன் போல்.. போட்டிருந்த பேண்ட் ஷர்ட்டைக் கூட மாற்றாமல்... சேரில் இறுக்கமாய் இறுகிய முகத்துடன் பாஸ்கர் உட்கார்ந்திருந்தான்.

"என்னங்க.. ஏன்... ஒரு... மாதிரி... இருக்கிங்க...?" என்றபடி சுமதி நிஜமான அக்கரையுடன் அவன் பக்கம் போனாள்..

அவளை நிமிர்ந்து கண்கள் சிவக்க பார்த்தான் பாஸ்கர். எரித்து விடுவது போல்... அப்படியே பஸ்பமாக்குவது போல் அவனது கண்கள் சூடாய் பளபளத்தன.

சுமதி ஒரு கனம் திடுக்கிட்டுப் போனவள் சமாளித்து", என்னாச்சு உங்களுக்கு... ஏன்.. அப்படிப் பார்க்கறீங்க...? மொதல்ல.. இந்த... பாலை சாப்பிடுங்க...? என்றபடி பால்தம்ளரை நீட்டினாள்.

அவள் அப்படி நீட்டியதும்.. பாஸ்கருக்கு வந்ததே கோபம்.

ஓங்கி... அதை தட்டி விட்டான்.

தமளர் தூரப் போய் விழுந்தது.

பால் முழுவதும்... சிதறி.. பரவியது.

அவனது செய்கையைக் கண்டு அப்படியே அரண்டு போய்விட்டாள் சுமதி. திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்க்க. பாஸ்கர் வேகமாய் எழுந்து அவள் பக்கம் வந்தான். விழுங்கி விடுவது போல் அவளைப் பார்த்தான்.

"என்னை... நீ... நல்லா... ஏமாத்திட்ட... சுமதி.." என்றான்.

"ஏமாத்திட்டேனா.. என்னங்க..: சொல்றீங்க?"

"ஸ்ஸீ. சும்மா. புரியாத மாதிரி நடிக்காத... ஆரம்பத்திலே நான் சந்தேகப்பட்டேன். உனக்கு சம்மதமில்லையோன்னு... எனக்கு தோணத்தான் செஞ்சது... அப்பவே நான் ஏதாவது செய்திருக்கணும்.. செய்யாம விட்டுட்டேன்... அதான்... என்னோட.... தப்பு.."

"நீங்க...' நீங்க... எதை.. எதைச் சொல்றிங்க...?"

சுமதி திக்கித் திணறி கேட்டாள். பாஸ்கர் கொதித்து.. வெடித்தான்.

"நடிச்சது... போதும்.. சும்மா... பசப்பாத.. உன்னோட வண்டவாளம் பெங்ளூரில தெரிஞ்சு போச்சு.. உனக்கு ட்ரான்ஸ்பரில் இஷ்டமில்லைன்னு யாருக்கும் தெரியாம நீ எழுதிக் கொடுத்ததை என் கிட்ட மேனேஜர் சொல்லிட்டாரு. உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்... என்னை... என்னை.. எவ்வளவு.. ஏமாத்தி.. இளிச்சவாயனாக்கி... ஏன் அப்படிச் செஞ்ச?"

திடீரென.. புயலாய்ச் சீறும்.. அவனைக் கண்டு செய்வதறியாமல் திகைத்தவள்" எனக்கு உங்களை மாதிரி உங்களோட தம்பி தங்கைகளும் முக்கியம். நான் வரமாட்டேன்!

என்றாள் அமைதியாய்.

"புருஷன் பேச்சு கேட்டு வர்ற பொண்டாட்டியைத் தான்.. நான் பாத்திருக்கேன்.. கேள்விப்பட்டிருக்கேன்... இப்படி புருஷனை... உதறிட்டு... மாமியார்க்கும்.. மாமியார் குடும்பத்துக்கும் வக்காலத்து வாங்குற மருமகளை இப்பத்தான்... நான்... பார்க்கறேன். சந்திக்கிறேன்."

"இது... வக்காலத்து.. இல்லைங்க... நான் அவங்களுக்குச் செய்ய வேண்டிய கடமை.. பணி... அதைத் தான்... செய்யப் போறேன்.."

பாஸ்கர் திரும்பவும் மௌனம் காத்தான்.

பெருமூச்சு விட்டான்.

'ஆனாலும்... நீ... இப்படி... இருப்பேன்னு... நான்.. நினைக்கவே... இல்ல.."

சுமதியைப் பார்த்தவாறு... சூள் கொட்டினான்.

கொஞ்ச நிமிடங்கள் தான்..



அவன் முகம் திரும்பவும் இறுகியது. கறுத்து கடுமையானது. அதே கடுமையுடன் சுமதியைப் பார்த்தான். "இதோ... பாரு... சுமதி.. அப்போ இதான் உன்னோட.... முடிவு... நீ... பெங்களூர் வரப் போவதில்ல... இங்கு இருந்து இவங்களுக்கு சேவை செய்யப்போற.. இவங்களை... காப்பாத்தப் போற... அப்படித்தானே..?"

சுமதி பேசவில்லை.. சம்மதத்திற்கு அறிகுறியாய் தலையை குனிந்து கொண்டாள்.

பாஸ்கருக்கு ஆத்திரம் அதிகமாயிற்று.

டக்கென... சேரில் இருந்து- எழுந்து கொண்டான்.. விறுவிறுவென தான் கொண்டு வந்த சூட்கேஸை தேடியெடுத்தபடி கிளம்ப ஆரம்பித்தான்.

என்னங்க... இந்த அர்த்த... ராத்திரியில.. எங்க.. கிளம்பறீங்க...?" என்று பதறி துடித்த சுமதியை சட்டை செய்யாது. பாஸ்கர் கிளம்பினான். போவதற்கு முன், " என்னை.. விட... அவங்க உனக்கு பெரிசா போயிட்டாங்க.. இல்ல.. நான்.. யாருன்னு... உனக்கு காட்டுறேன்... பெங்களூர்க்கே திரும்பிப் போக போறேன்...

இனி... இங்க வரமாட்டேன்... குட்பை...."

சொன்னான்... சொல்லிய வேகத்திலேயே.. புயலாய்... கிளம்பி.. அவள் பார்வையிலிருந்து மறைந்து போக... அப்படியே இடிந்து உட்கார்ந்து விட்டாள் சுமதி.

## 14



சுமதி நெடுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பாஸ்கர் அப்படிச் சட்சட்டென முடிவு எடுப்பான்.. திடுதிப்பென்று காரியங்களில் இறங்கி செயல்படுத்துவான் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை. அவளுக்கு ரொம்பவும் அதிர்ச்சியாய் இருந்தது. ஒரே.. சம்பவத்தில், 'உன் சங்காத்தமே வேண்டாம் நான் போறேன்... குட்பை...!' எனச் சொல்லும் அளவுக்கு வந்து விட்டாரே...? எதனால் இந்த முடிவு... இந்த விரோதம் அவருக்கு வந்து விட்டதற்கு காரணம் என்ன?

சுமதி நினைத்தவாறு குழம்பினாள்... தான் வாழ்க்கைப் பாதையில் தப்பானவரை தேர்ந்தெடுத்துவிட்டோமோ. என்ற நினைப்பு கூட அவளுள் உதித்தது. மேலும்.. அவள் இதற்குமுன் இவ்வளவு கோபப்பட்ட... இப்படி ஆத்திரத்தில் வெடிக்கும் பாஸ்கரைப் பார்த்ததே.. இல்லை.. பின்... ஏன்.. இப்படி..., பாஸ்கர் ஒரு சராசரி ஆண்தானா? மனைவியைக் கட்டுப் பெட்டியாக்கி... நான் சொன்னபடியெல்லாம் கேட்க வேண்டும்... நான் நினைத்தபடியெல்லாம் ஆட வேண்டும்.. அவளுக்கென்று... குணமோ...

தனிமனதோ இருக்கக் கூடாது. தன் முடிவுப்படிதான்... அவள் விருப்பு வெறுப்பு இருக்க வேண்டும். இப்படியெல்லாம் தன் புருஷ கம்பீரத்தை நிலை நாட்டும் ஆண்களில் ஒருவராய்த்தான் பாஸ்கர் இருப்பாரா... எவ்வளவு ஈஸியாய்... எப்படி எடுத்தெறிந்து பேசிவிட்டார்...? சுமதி தவித்துப் போனவளாய் கவலைகளில் ஆழ்ந்தாள்.

அந்த அர்த்த இராத்திரியில்.. வீருப்பாய் இரவோடு இரவாய் பாஸ்கர் பெங்களூர்க்கு கிளம்பியிருந்தாலும்.. உள்ளுக்குள் அவனுக்கு உதறலாய்த்தான் இருந்தது.. ஏதோ.. சுமதியிடம்... அவள் ட்ரான்ஸ்பரில் தன்னை ஏமாற்றியது தெரிந்ததும். அவள் பயந்து... நடுங்கிவிடுவாள்.. மன்னிப்புக் கேட்டு.... தன்னுடன் வந்துவிடுவாள் என்று தான் நினைத்திருந்தான்... ஆனால் அவனது நினைப்பு பொய்யாயிற்று. அவன் எதிர்பார்க்கவில்லை. சுமதி இப்படிப் பேசுவாள். தைரியமாய் தன்னை எதிர் கொள்வாள் என்பதை ஜீரணிக்க முடியவில்லை.

அடிப்பட்டவன் போல பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான்.

அவனுக்கு ரொம்பவும் அவமானமாய் இருந்தது. சுமதி என்னை எடுத்தெறிந்து... பேசிவிட்டதாய் ரொம்பவும் கேவலப்படுத்திவிட்டதாய் நினைத்தான். ஆங்கார உணர்வொன்று பூதகாரமாய் அவனுள் எழுந்தது. எப்படியும்... அவளை... தன் வழிக்கு கொண்டு வர வேண்டும் என துடித்தான். சுமதி... இருந்து விடுவாளா... என்ன..? புருஷன்... நான்... மட்டும் இங்கே.. பெங்களூரில் வேலைபார்க்க... அவள் மட்டும்... அங்கு... தனியாய்... அப்படியொரு வாழ்க்கையை சுமதி வாழ்ந்து.. விடுவாளா... என்ன...? பாஸ்கர் யோசித்தவனுக்கு... அந்த யோசிப்பே ரொம்பவும் பயங்கொடுத்து.. சுமதி பேசுகிற பேச்சைப் பார்த்தால்... அவளிடம் இருக்கிற தைரியத்தைப் பார்த்தால்... நிஜமாகவே அவள் அப்படி உறுதியாய் இருந்து விடுவாள் போல்த்தான் தெரிகிறது. விடக்கூடாது.. அவளை... அவளது... உறுதியைக் குலைக்க.. வேண்டும்... அவளது தீர்மானத்தை.. பொய்யாக்க வேண்டும்.. எல்லாவற்றையும்.. செய்து... அவளை... நம் காலில் விழுந்து கதற வைக்க வேண்டும்...

என்ன... செய்ய...?

யோசித்தவனுக்கு... சுரீரென அந்த நினைப்பு உயிர்கொடுத்தது.

எப்படியும்.. நான்... வழிக்கு வந்துவிடுவேன்.. மனம் மாறி... அவள் எண்ணப்படியே.. சென்று விடுவேன் என்ற தைரியத்தில்தானே... அவளால் இப்படி உறுதியாய் இருக்க முடிகிறது..? என்ன இருந்தாலும்.. இவர் புருஷன்... நாம்.. மனைவி.. என்கிற அந்த சமுதாய "ஸ்ட்டேட்டஸ்" தானே... இவளுக்கு பக்கபலமாய் போயிற்று..? அதை வைத்துத்தானே... இவளுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத என் தம்பி தங்கைகள் மீது உரிமை கொண்டு, உறவு கொண்டாடி.... என்னை... இப்படி.. கேவலப்படுத்தி விட்டாள்...? இவளுக்கென்ன.. அவர்கள் மேல்... அப்படியொரு கரிசனம்.. பொத்துக் கொண்டு... என்க்கில்லாத அக்கறையா..?



எனக்குத்தான் அக்கறை இல்லாதது போல் இவள் ஆக்கி விட்டாளே... என்னை... சிறுமைப்படுத்தி... அவர்கள்.. முகத்தில் முளிக்க... முடியாதபடி... ரகசியமாய் நான் செய்தவைகளையெல்லாம் வெளிச்சம் போட்டு காட்டி விட்டாளே...?

விடக் கூடாது.. இவளை.. மனைவி.. என்ற... ஸ்தானத்தை வைத்துதானே உரிமை கொண்டு இவ்வளவு ஆட்டம் போடுகிறாள்....? அந்த... ஸ்தானத்திற்கே... நாம் ஆட்டம் கொடுத்துவிட்டால்... அந்த மனைவி ஸ்தானமே... பறிபோய்விடும். என்ற பயத்தைக் கொடுத்து விட்டால்..?

பாஸ்கர் நிமிர்ந்து... சுறுசுறுப்பாய் யோசிக்க ஆரம்பித்து விட்டான்... அவன் மனதில் சுமதியைப் பழிவாங்க... மேலும் மேலும் விபரீத எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன.

அதற்கு ஏற்றாற்போல்... அவனது பெங்களூர் ஆபீசிலும் மளமளவென காரியங்கள் வரும் நாளில் நடக்க ஆரம்பித்தன.

## 15



**பா**ஸ்கரின்.... வீடு...

ராஜம், பாஸ்கரின் சுயரூபம் சுயநலம் தெரிந்தவள் சும்மா இருக்கவில்லை. தன் பெண்கள் இருவரையும் கூப்பிட்டு ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் சொல்லி விட்டாள். ராதாவிற்கும் சரி... சுகன்யாவிற்கும் சரி. பலத்த அதிர்ச்சி. 'நிஜமா.. மன்னி..? என்றபடி சுமதியை சூழ்ந்து கொண்டனர். நிஜமான கவலையில் தங்களுக்காக பாடுபடும் சுமதியைக் கண்டு துடித்தனர்.

"மன்னி... எங்களுக்காக... நீங்க.. எதுககு... பகைச்சுக்கிட்டு... சிரமப் படணும்,.." என்று கண்கலங்க.

சுமதி அவர்களது கண்களை துடைத்து விட்டவள் சிரித்தாள்.

"சிரமமா...? எனக்கா..? சே... சே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல,

வாழ்க்கைன்னா பிரச்சனைகள் வரத்தான் செய்யும்.. நாமளும் சந்திச்சுத்தான் ஆகணும்.." என்று அவர்களை ஆறுதல்படுத்தியவள் "சரி.. சரி.. இதையெல்லாம்.. நான் பார்த்துக்குவேன்... நீங்க கவலைப்படக் கூடாது... உங்க கவனம் முழுவதும்.. உங்களோட படிப்பிலதான் இருக்கணும்.. நீங்கதான் படிச்சு... ஒரு நல்ல நிலமைக்கு வந்து தலைநிமிர்ந்து நிற்கணும். செய்வீங்களா...?" என்றாள்.. கண்டிப்பா. செய்வோம்..."

இருவரும் தலையசைத்தனர்... அகன்றனர்.

சுமதி ஆபீசுக்கு ரெடியாக ஆரம்பித்தாள். கூடவே அப்பாவின் ஞாபகம் இன்று அவளுக்கு வந்தது. அப்பாவைப் பார்த்து ரொம்ப நாளாயிற்றே இன்று கண்டிப்பாய் பார்த்துவிட வேண்டும் என நினைத்துக் கொண்டாள். பின்

ஞாபகமாய் ராஜம் சொன்ன மளிகைச் சாமான்கள் லிஸ்ட்டை எடுத்துக் கொண்டாள். "வரும்போது வாங்கிட்டு வாரேன்...

வேற எதுவும் வேணுமா அத்தே..?" என்றாள்.

"எல்லாம்... இருக்குடியம்மா..."

"ராதா.. செமஸ்டருக்கு பீஸ்.. கட்டணும்ன்னு சொல்லிக்கிட்டிருந்தா பணம்... எடுத்து கொடுத்திருங்கத்த..."

"சரிம்மா..."

"பொறகு... நம்ம தினேஷுக்கு டியூசன் எடுக்க பக்கத்து வீட்டு லஷ்மி டீச்சரை வரச் சொல்லியிருக்கேன்... வந்தா... பார்த்துக்கோங்க..."

"சரிம்மா... நான்... பார்த்துக்கறேன்..."

"அப்ப.. நான் வரட்டுமா...?" என்றபடி சுமதி கிளம்பியவள் ராஜத்திடம் எதையோ கவனித்து விட்டவளாய் நின்று அவள் பக்கத்தில் வந்தாள்.

"ஆமா... நானும் கவனிச்சிட்டேன்... என்னத்தே.. இது?. உங்க சேலை.. எல்லாமே... இப்படி... சாயம்... வெளுத்து... நைஞ்சு... நைஞ்சு...?..." என்றபடி சுமதி ராஜத்தின் அந்த பழைய சேலையின் கோலத்தை சுற்றிக் காட்டினாள். ராஜம் சிரித்தாள்.

"நான்... கிழவி... எனக்கு.. இது... போதும்மா..."

"நோ...! நோ...! சுமதி அவசரமாய் மறுத்தவள், "அத்த.. ரெடியா... இருங்க.. இன்னிக்கு சாயங்காலம் வந்ததும்.. நாம புடவை கடைக்குப் போறோம்... உங்களுக்கு புடவை எடுக்கப் போறோம்..." என்று உறுதியாய் கண்டிப்பான குரலில் சொல்லிட்டு... கிளம்பினாள்.

ராஜம் அவள் போவதையே மனம் உருக பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்கு.. இப்படியொரு மருமகளா..? என்ற சந்தோஷ பூரிப்பில் அவளது உள்ளம் குளிர ஆரம்பித்தது.

அன்று மதிய லஞ்ச் இண்டர்வெலின் போது.. ஒன் அவர் பர்மிஷன் போட்டுவிட்டு அப்பாவை சந்திக்கக் கிளம்பினாள் சுமதி..

"ரொம்ப நாளைக்குப் பிறகு அப்பாவை சந்திக்கிறோம்..' என்ற உணர்வே அவளுக்கு ரொம்பவும் சந்தோஷமாய் மகிழ்ச்சிதரக் கூடியதாய் இருந்தது. குணசேகரும்.

அப்படியே... அதே மனநிலையில் இருந்தார் போலும்.

"வா... வா... சுமதி.. உன்னைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன்.. "என்றபடி உற்சாகமாய் வரவேற்றார் சுமதியின் தந்தை குணசேகர்.

"என்னை... பத்தி அப்படியென்ன.. நினைச்சிங்க... சொல்லுங்க...?" கேட்டு பழைய குறும்புடன் மிடுக்காய் அவர் முன் உட்கார்ந்து... கையை சொடுக்கியவாறு சுமதி சிரிக்க...



குணசேகரும் மனம் விட்டு சிரித்தார்.

கொஞ்ச நேரம்... அவரிடம் பழைய விஷயங்களையெல்லாம் நினைவுபடுத்தி பேசிவிட்டு.. சுமதி நிஜத்திற்கு வந்தாள்..." அப்பா... நான்... சொல்லப்போறது... உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும்... பாஸ்கர் நாம நினைச்ச மாதிரி இல்லப்பா..." என்றபடி விஷயத்தை ஆரம்பிக்க.

"என்னம்மா... சொல்ற...?" என்றார் குணசேகர் திடுக்கிட்டு.

சுமதி பாஸ்கரைப் பத்தி... அவனது விபரீத எண்ணத்தைப் பற்றி ஒன்று விடாமல்... நேற்று நடந்தது வரை எல்லாவற்றையும் சொன்னாள். அப்பாவையே கவலையாய்ப் பார்த்தாள்.

குணசேகரும்... அதிர்ந்து போயிருந்தார்.

"நம்ம... பாஸ்கரா... இப்படி...? ஏன்... ஏனம்மா... இப்படி அவருக்கு ஒரு எண்ணம் சுயநலமா... வந்திச்சு...?" என்றார் அதிர்ச்சி விலகாதவராய்

"அதான்... தெரியலைப்பா...!"

சுமதி கைகளைப் பிசைந்தாள்.

"என்னால் நம்பவே... முடியலைம்மா...! கூடப்பிறந்த தம்பி தங்கைகளை... பெத்த அம்மாவை.. எல்லாரையும் உதறிட்டு... எல்லோரும்... வேண்டாம்னு... சொல்லிட்டு... எந்த மகனால இப்படி ஆசைப்பட முடியும்... ரொம்ப விசித்திரமா... எனக்கு... இருக்கும்மா..."

குணசேகர் ஆழமாய் யோசித்தார்.

"அப்பா..."

"சொல்லும்மா..."

"நான் எடுத்த முடிவு.. சரிதானா...? நீங்க என்னப்பா... நினைக்கறீங்க..? உங்களுக்கு... வருத்தம் ஒண்ணும் இல்லையே...?

சுமதி இப்படிக் கேட்டதும் தான் தாமதம் குணசேகர் உணர்ச்சிவசப்பட்டவராய் எழுந்துவிட்டார்.

"என்னம்மா... இப்படிக் கேட்டுட்ட...? மத்தவங்களை பழிச்சிட்டு என் மகள் மாத்திரம் சந்தோஷமா... வாழணும்னு நினைக்கிற சராசரி அப்பா.. நான் இல்லம்மா...!

எனக்கு... நீ... முக்கியம் அதை விட நாலு பேர். உன்னை நல்லபடியா சொல்லணும்... அது... ரொம்ப முக்கியம்மா! அதனால... நீ... எடுத்த முடிவு ரொம்ப கரெக்ட்...! நான் உன்னை... பாராட்டுறேன்ம்மா...!"

குணசேகர் மனம் விட்டு பேசியவர் தொடர்ந்தார்.

"அது... மட்டுமில்ல... சுமதி..."

"சொல்லுங்கப்பா..."

"உனக்கு.. எந்த... சோதனை.. எப்படிப்பட்ட இன்னல் வந்தாலும் சரி... நீ... எதுக்கும் கவலைப்படாம... தைரியமா எதிர்கொள்ளணும். நான்... இருக்கிறேன்... உனக்கு பக்கபலமா... எப்பவும்.. நான் இருப்பேன்... அந்த எண்ணத்தோட... தைரியமா... நீ... செயல்படணும்... பிரச்சனைகளை.. சந்திக்கணும். சரியாமா...?"

சுமதி தலையாட்டினாள்.. அவளுள் உறுதி கூடியது.

## 16



ஒரு வாரம் ஓடி விட்டது.

சுமதியிடம் இருந்து... எந்த லெட்டரும் இல்லை.. எந்தவித பதிலும் இல்லை... பாஸ்கர் அதிர்ந்து போனான். அவனுள் ஆத்திரம் கொப்பளித்தது.. தான் இல்லாது.... சுமதி அங்கு இருக்கமாட்டாள்.. என்ற கணக்கெல்லாம் பொய்யாக்கி சுமதி நிஜமாகவே அங்கு இருப்பது...

அவனுக்கு சுமதி மேல் மேலும் ஆத்திரத்தை கூட்டியது.

கோபத்தில் துடித்தவனாய்... மனம் வெம்பிப் போனவனாய் யோசித்தான்.. என்ன.. செய்ய...? சுமதியை எப்படி தன் வழிக்கு கொண்டு வர...? என்ற எண்ணமே... அவனுள் மேலோங்கி நின்றது.

அன்று... ஆபீஸுக்கு வந்தும் கூட அவனுக்கு அந்த நினைப்பு மாறவில்லை.. வேலைகளில் கவனம் செலுத்தாதவனாய் சதா அது பற்றியே வன்மம் பொங்க யோசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன.. ஸார்... எந்த கோட்டையைப் பிடிக்க்... அப்படி... யோசனை...?"

திடீர் பெண் குரல் கேட்டு கலைந்தான்.

எதிரே... ரேகா... புதிதாய்... திருச்சியிலிருந்து... பெங்களூர்க்கு மாற்றலாகி வந்திருக்கும் ரேகா.. ரேகா அவனது அக்கவுண்ட் செக்‌ஷன்தான். அடுத்தடுத்த மேஜை... ரொம்பவும் கலகலப்பான ஜாலி டைப்.. அவள் வந்தது முதல் ஆபிசரிலிருந்து பியூன் வரை அவள் அரட்டையடிக்காத ஆள்... கிடையாது... ஒரு பெண் இவ்வளவு சோஷியலாய். இவ்வளவு தூரம்... நம்முடன் நெருங்கிப் பழகுவாளா...? என்று எல்லோரையும் வியக்க வைத்தவள்..

பாஸ்கரும்... அப்படியே வியந்து போனவனாய்... அவள் கேட்டதற்கு பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்.

"என்ன... அப்படிப் பார்க்கறீங்க...? உங்க... அழகான கனவைக் கலைச்சிட்டனா...?"

பாஸ்கர் அவசரமாய் நிஜத்திற்கு வந்தான். அவசரமாய், "சே... சே...! அப்படியெல்லாம். ஒண்ணுமில்ல...!" என்றான்.



"பின்ன... என்ன... நினைச்சிங்க...?"

ரேகா.. அப்படிக் கேட்டதும்.. பாஸ்கரே.. எதிர்பார்க்கவில்லை. டக்கென அவனது வாயில் வந்துவிட்டது. "வேறென்ன... உங்களைப் பத்திதான்... நினைச்சேன்... என்று சொல்லிவிட்டான்.

ரேகா லேசாய் அதிர்ந்து அவனைப் பார்த்தாள்..

"என்னைப் பத்தியா...?"

"ஆமா..."

"என்னைப் பத்தி... நினைக்க... அப்படியென்ன... இருக்கு...?"

இவள் லேசில் விடமாட்டாள் என்பதை பாஸ்கர் புரிந்து கொண்டான். சமாளிக்க ஆரம்பித்தான்.

"உங்களைப் பத்தின்னா... உங்களோட.... பர்ஸனாலிட்டியைப் பத்தி... சோஷியலா.. எல்லோரோடும்.. பழகும்.. உங்க.. தன்மையைப் பத்தி எனக்கு.. அது... ரொம்ப... ஆச்சரியமா... வியப்பா.. இருக்கு..."

"வொய்...? வொய்... பாஸ்கர்...?"

புருவம் உயர்த்தி... தான் போட்டிருந்த காஸ்ட்லியான செண்ட் மணமணக்க ரேகா கேட்டாள்.

"நான்... இதுவரையும்... அப்படியாரையும் சந்திச்சதில்லை.... ரேகா..."

"அது உங்களோட.... தப்பு! இதுவரையும்... சேலையை இழுத்து சுத்திக்கிட்டு குனிஞ்ச தலை நிமிராம... இருக்கிற கட்டுப்பெட்டி... பெண்க்ளைத்தான் நீங்க பார்த்திருக்கீங்க... அப்படித்தான...?

"எக்ஸாட்லி...!யூ... ஆர்... ரைட் ரேகா...!"

"ஆனா... அதெல்லாம்... சுத்த... வேஸ்ட்.... தேவையில்லாததுன்னு... நினைக்கிறவ நான்... என்னைப் பொறுத்தவரையில்... ஆபீஸுல வேலை பார்க்கிற நாமெல்லாம்... ஒரு குடும்பம் மாதிரி... ஒருத்தருக்கு ஒருத்தர் நாம நல்லா... புரிஞ்சுக்கணும்... நமக்குள்ள... நல்ல.. அண்டர்ஸ்டாண்டிங் வேணும்... என்ன.. நான் சொல்றது... சரியா... பாஸ்கர்...?"

"சென்ட் பர்சென்ட்.... கரெக்ட்... ஐ.... அக்ரி....!" என்றபடி பாஸ்கர் சிரித்தான். அவனது சிரிப்பைக் கண்டு... ரேகாவும் ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கண்டவள்போல் விழுந்து விழுந்து சிரித்தாள்.

அதற்குப்பின் வந்த ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களும் அவர்களை அடிக்கடி. பேச வைத்தன.. நாளுக்கு நாள். அவர்களது... பேச்சில் சுவாரஸ்யம் கூடியது. அழகாய் கவர்ச்சியான உடற்கட்டுடன் எல்லோரையும் கிறங்கடிக்கும் ரேகாவை அவனுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. அவளுடன் நெருங்கிப் பழக பாஸ்கரிடம் ஆசை எழுந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு அவளிடம் பேச ஆரம்பித்தான். ரேகாவும் மற்றவர்களைவிட.... பாஸ்கரிடம் பேசுவதிலும் பழகுவதிலும்தான் அதிகம் ஆர்வம் காட்ட...

அவர்களுள் பேச்சு தொடர்ந்தது. இருவரும் ஆபீஸ் நேரத்திலும்... சரி... ஆபீஸ். முடிந்த பிறகும் சரி... மணிக்கணக்காய் பேச ஆரம்பித்தனர். பாஸ்கர் தனது... கவலைகளை... சுமதியைப் பற்றிய நினைவுகளையெல்லாம் மறக்க ஆரம்பித்தான்.. தனது பிரச்சனைகளுக்கு கடவுளாய் பார்த்து ஏற்படுத்திய தீர்ப்பு என்பது போல் ரேகாவுடன்னே.. சுற்ற ஆரம்பித்தான்... ஷாப்பிங் இனிமா... என அவள் போகும் போது கம்பெனி கொடுத்தான்.

அதற்கு ஏற்றார் போல்.. ரேகாவும் தனியே.. எந்த சொந்த பந்தமுமின்றி... ஹாஸ்டல் ரூம் ஒன்றில் தங்கியே... வேலை பார்த்து வருவதை உணர்ந்தபோது பாஸ்கர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே... இல்லை..

அவன் மனம் விபரீதமாய் கணக்கு போட ஆரம்பித்தது. பாஸ்கர் ரேகாவைப் பற்றி தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தான்.



## 17

ரேகாவும்.. பாஸ்கரும் பழக்கத்தில் ரொம்பவும் நெருங்கியிருந்தனர். அந்த அவர்களது அக்கௌவுண்ட் செக்ஷனில்... எப்போதும் அந்த பேச்சு சப்தம்... விழுந்து விழுந்து அவர்கள் சிரிக்கும் சிரிப்பே கேட்டு... எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஆபீஸ் மற்ற ஸ்டாஃப்கள் ஊழியர்கள்... எல்லோருமே... நடுத்தரவயதைத் தாண்டியவர்களாகையால் யாரும்.. இவர்களது அந்த அளவு கடந்த பழக்கத்தை பொருட்படுத்தவில்லை... அவர்கள் பாட்டுக்கு தானுண்டு தங்களது வேலையுண்டு என்று வந்து சென்று கொண்டிருந்தார்கள்... அது பாஸ்கருக்கும் ரேகாவிற்கும் ரொம்பவும் வசதியாயிற்று.

ஆபீஸ் நேரம் மாலை ஐந்து மணிக்கு முடிந்தவுடன் இருவரும் கிளம்பி விடுவார்கள்.

முதலில் ஹோட்டல் டிபனில்... ஆரம்பித்து... பார்க்... பீச்... நாடக... ஸபா... சினிமா... என எதிலாவது நேரம் போய் இரவு ஒன்பது மணிவரை கடத்திவிடுவார்கள். பின் பிரிய மனம் இல்லாதவர்கள் போல் பிரிந்து... மறுபடியும் மறுநாள் அதே போல தொடர்ந்து...

இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருக்க... அன்றும் அப்படியே ரேகாவுடன் ஊர் முழுவதும் சுற்றிவிட்டு பாஸ்கர் திரும்பியிருந்தான்.

தம் ரூமிற்குள் நுழைந்து... படுத்துக் கொண்டவன்... தூக்கம் வராமல் ரேகாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். இன்னமும் இப்படியே வெறுமே.. பழகிக் கொண்டிராமல் சீக்கிரமே ஒரு முடிவு.. எடுக்க வேண்டும்.. என்று நினைப்பு வாட்டியது... கூடவே... சுமதி போன வாரம் எழுதிய லெட்டர் அவனது ஞாபகத்திற்கு வர.. அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய்த்



தான் வந்தது. இவளும்... மனைவியென்று இருக்கிறாளே... தன் பேச்சைக் கேட்காமல் பிடிவாதமாய் யாரையோ.. காப்பாற்றப் போகிறேன் என்று.. சுமதியை நினைத்ததுமே ஒரே... புழுக்கமாய்... மனம் முழுக்க வெறுப்பாய் உணர்ந்தான்.. தன் சொல்படி கேளாத அவளை அப்படியே உதறிவிட்டால் என்ன...? என்ற நினைப்பே அவனுள் ஊர்ந்தோடியது. ரொம்ப நேரம் யோசித்துவிட்டு கடைசியில் பாஸ்கர் அந்த முடிவிற்கு வந்தான். சீக்கிரமே... தன் மனதில் உள்ள விஷயங்கள் பற்றி ரேகாவிடம் பேசிவிட வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

## 18



"நீ மட்டும் இங்கு வருவதாய் இருந்தால் வா. இல்லாவிட்டால் அங்கேயே இரு!"

பாஸ்கர் லெட்டர் எழுதியிருந்தான். சுமதி அதிர்ச்சியடைந்திருந்தாள். இப்படி ஒரு கடிதம் அவனிடமிருந்து வருமென அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

ராஜம் இந்த விஷயத்தை கேள்விப்பட்டதும்... ஓவென அழுதேவிட்டாள்.

"சுமதி.. எனக்கு பயமா... இருக்குடி... அவன்.. என்னை... எங்களை தலைமுழுகினா பரவாயில்ல.. உன்னையும் சேர்த்து தலை முழுகப் பார்க்கிறான்.." என்று அரற்றினாள்.

கூடவே, "சுமதி.. கிளம்பு, இனியும் நீ தாமதிக்கிறது... தப்பு...! என்றாள்.

"அத்தை என்ன சொல்றீங்க...?"

"ஆமாம்மா... எங்களைப் பத்தி.. கவலைப்படாதே... நீ. இளம் தளிர். வாழ வேண்டிய வயசு, வீணா உன்னோட வாழ்க்கை பட்டுப் போயிடக் கூடாது..."

"அப்போ... என்ன பெங்களூர் போகச் சொல்றீங்களா..."

"ஆமா... வேற வழியில்லம்மா... இன்னும்.. நீ... பொறுத்திக்கிட்டிருந்தா... பாஸ்கர் மனம் மாறிறுவான்னு... காத்துக்கிட்டிருந்தா... உன்னை... இப்படியே.. அவன் ஒதுக்கி வைச்சாலும்... வைச்சிருவான்..."

"எனக்கு... நம்பிக்கை... இருக்குத்த..."

"உனக்கு... நம்பிக்கை இருக்கலாம்.. ஆனா... எனக்கு பாஸ்கரைப் பத்தி தெரியும்... ஒரு... தடவை... ஒரு... முடிவு எடுத்தா லேசில மாறமாட்டான்.. அதிலே வில்லா... நிறபான்..."

சுமதி பேசாமல் இருந்தாள்..

"என்ன... சுமதி... யோசிக்கிற..? இனியும்.. காலம், தாழ்த்தாதேம்மா...! எங்களைப் பத்தில்லாம் பொறகு கவலைப்படலாம். இப்போ... உனக்கு இது முக்கியமான பிரச்சனை... சொல்லப்போனா... பெரிய ஆபத்து.. மொதல்ல இந்த ஆபத்திலயிருந்து.. உன்னை.. நீ... காப்பாத்திக்கோம்மா...!"

ராஜம் விடவில்லை... திரும்பத் திரும்ப அதையே சொன்னாள். சுமதியை சம்மதிக்க வைத்தாள்." வேற ஒண்ணும்... நீ செய்ய வேண்டாம்... சுமதி... பேசாம... ஒரு தடவை பெங்களூர் போய் அவனைப் பாத்துட்டு வா... பேசிட்டு வா... அது... போதும்..." என்று கூறி விடாப்பிடியாய் சுமதியை கிளம்பவும் வைத்துவிட்டாள்.

வேறு வழியில்லாது சுமதியும் அரைமனதோடு சம்மதித்து பாஸ்கரை சந்திக்க பெங்களூர் கிளம்பினாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

லீவு நாள்.. பாஸ்கர் வீட்டில்தான் இருப்பான்... பேச வசதியாயிருக்கும் என்று அந்த ஞாயிற்றுக்கிழமை சுமதி பெங்களூரில் கால் பதித்து அவனது ரூமைத் தேடிப் போனபோது...

பாஸ்கர் தற்செயலாய் வெளியே வந்தவன் சுமதியைப் பார்த்ததும் அதிர்ந்தான்.

மறுகணமே.. அவன் முகம் இறுகி கறுகறுத்தது. பெட்டியும் கையுமாய் அவள் வந்திருப்பதைப் பார்த்ததுமே புரிந்து கொண்டான். விறுவிறுவென அதே இறுகிய முகத்தோடு... உள்ளே போய் சேரில் படக்கென உட்கார்ந்து கொண்டான்.

சுமதி.. அவன் ஆசையாய் முக மலர... தன்னை வரவேற்க மாட்டான் என்பதை அறிந்திருந்தாலும்... தன்னைப் பார்த்ததும் அவனுள் வந்து தொற்றிக் கொண்ட... கடுகடுத்தனம் அவளுக்கு புதிராயிருந்தது. நிதானமாய் பெட்டியை முன்னறையில் வைத்துவிட்டு உள்ளே போனாள்.

அவளை நிமிர்ந்து பார்க்காமலே பாஸ்கர் கேட்டான்.

"என்ன... விஷயம்.... ஏன்... இங்க... வந்த...?"

வெடுக்கென அவன் கேட்டதும் சுமதி ஒரு கணம் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

"என்னங்க... கேள்வி... இது... உங்களைத் தேடி நான் வரக்கூடாதா...?"

சுமதி கேட்டு... பாஸ்கர் அடக்க முடியாமல் கேலி பொங்க சிரித்தான்.

"வரலாம்... ஆனா... இப்போ... இல்ல... முந்தியே... வந்திருக்கணும்... டூ... லேட்...!"

"என்னங்க... சொல்றீங்க...?"

"இங்கிலிஷ்... புரியலையா...? தமிழ்லே... சொல்றேன்... என்கூட நீ... மொதல்லயே... என் பேச்சைக் கேட்டு வந்திருக்கணும்... அப்படி வந்திருந்தா... நீ... என் மனைவி... எனக்கு கட்டுப்பட்டவாங்கறதில அர்த்தம்... இருக்கு... ஆனா... நீ...? நீதான் எனக்கு கட்டுப்வங்கறதிலடலயே. என் வார்த்தைகளை... மதிக்கலையே...? ஸோ... நான் தீவிரமா... சிந்திச்சு... ஒரு முடிவெடுத்திட்டேன்...



ஒரு முடிவுக்கு வந்திட்டேன்...!"

"என்ன... முடிவுங்க...?"

பாஸ்கர் எழுந்து நிதானமாய் அவள் பக்கத்தில் வந்து முகத்தில் அப்பட்டமாய் அந்த வில்லத்தனம் ஜொலிக்க அவளைப் பார்த்தான்.

"உன்னை... தலைமுழுகணும்னு... முடிவு... பண்ணிட்டேன்..." அழுத்தமாய் வார்த்தைகளை உச்சரித்தான்.

"நீங்க... நீ... ங்க.... ளா... இப்படிப்.... பே..... ச.... ற.. து......?" அப்படியே அசந்து போய் சுமதி கேட்டாள்.

"யெஸ்.. அதே பாஸ்கர்தான்...! உன்னை காதலிச்ச... உன்னை தொட்டு தாலிகட்டிய அதே பாஸ்கர்தான்...! போதுமா...? சுமதி... மனித மனசு... இப்படித்தான்... தாவிக்கிட்டே இருக்கும்... உன்னையே... நினைச்சு... உன்னையே... நினைச்சு... உன்னையே... காதலிச்ச மனசுதான்... இப்போ மாறி உன்னையே வெறுக்கச் சொல்லுது... ஸோ... நான்... உன்னை... எப்பவோ மறந்திட்டேன்.... எனக்குன்னு... ஒரு புது வாழ்க்கையை அமைச்சுக்கணும்ன்னு... தீர்மானிச்சுக்கிட்டேன்..."

"புது வாழ்க்கையா...?"

"யெஸ்....! அதைப் பத்தியெல்லாம்... பின்னால... நீ... விவரமா... உனக்கு டைவோர்ஸ்... நோட்டீஸ் வந்த... பிறகு... தெரிஞ்சுக்கலாம்..."

சுமதியினுள் எதுவோ... வெடித்தது... துடித்துப் போய் பார்த்தாள்.

"என்ன... சொல்றீங்க... டைவோர்ஸ்...? என்... னை... என்னை...

டை... வோ... ர்... ஸ்... பண்.. ணி... றீ... ங்.... க.... ளா...?"

சுமதி பதறிக் கேட்க... பாஸ்கர் மேலும் அசிங்கமாய்ச் சிரித்தான்.

"வேற... வழி... கிடையாது... சுமதி..! நான் சொன்னனே... புது வாழ்க்கை... அது... என்ன... தெரியுமா...? இன்னொரு கல்யாணம்தான்...! அதைத்தான் நான் செஞ்சுக்கப் போறேன்....! நம்ம இந்தியச் சட்டப்படி எனக்கு ஒரு மனைவி.. இருக்கும்போது... இன்னொருத்தியை கட்டிக்க முடியாது... ஸோ... உன்னை... டைவோர்ஸ் பண்ணப்போறேன்... இன்னொருத்தியை என்னோட... மனைவியா ஆக்கிக்கப் போறேன்.. போதுமா... இப்போ... புரியுதா...?

சுமதி ஒன்றும் பேசவில்லை.. மௌனமாய் அவனையே வெறித்தாள்... ஒருபுறம் அழுகை புறண்டாலும்... மறுபுறம் அவளையறியாமல் இறுக்கம் கூடியது.

"அப்படி... எனக்கு வரப்போற... புது மனைவி... யாருன்னு தெரிஞ்சுக்க... உனக்கு... ஆர்வமா... இருக்குமே...? யாரு... தெரியுமா?... சொல்லட்டா...?"

பாஸ்கர் அவள் பக்கத்தில் வந்தவன் கண்களில் ஏக்காளம் ஜொலிக்க... அவள் துடிப்பை ரஸித்தான்.. பின் சொன்னான்.

"என்... கூட வேலை... பார்க்கிற ரேகா...!"

பாஸ்கருக்கு அது அளவில்லாத சந்தோஷமாய் செக்கலிப்பாய் இருந்தது- சுமதி வந்தது- அவன் முகத்திலடித்தாற்போல் பேசியதையெல்லாம்... அடிக்கடி நினைத்து மகிழ ஆரம்பித்தான்... அதைவிட ரேகாவே ஒருநாள் மனம் திறந்து, "பாஸ்கர்... நீங்கதான் எனக்கு... பர்ஃபெக்ட் மேட்ச்... சரியான ஜோடி... நீங்க... என்ன நினைக்கிறீங்க....? என்று அவள் கேட்ட போது... அவன் அடைந்த புளகாங்கிதத்திற்கு அளவே கிடையாது...

அத்தோடு... நில்லாமல் சுமதி விஷயத்தில் சொன்னபடி செய்துவிட வேண்டும் என்ற முடிவிற்கும் வந்து... உடனடியாய் ஒரு வக்கீலைப் பிடித்து டைவர்ஸ் நோட்டீஸ் சுமதிக்கு சூட்டோடு சூடாய் அனுப்பியும் விட்டான் அவனுக்கு. அனுப்பிய பிறகுதான் நிம்மதியாயிருந்தது... விஷயத்தை மறக்காமல் ரேகாவிடம் சொல்ல... அவள் துள்ளிக் குதிக்காத குறையாய், அவன் கையைப் பிடித்து குலுக்கினாள்... வெல்...டன் இப்படித்தான் துணிச்சலா இருக்கணும் பாஸ்கர்...!' என்று தைரிய மூட்டினாள். பின், நாட்கள்... ஓட... கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களது பழக்கம்-நெருக்கமாக.

பாஸ்கரே ஒரு நாள் ரேகாவிடம் கேட்டுவிட்டான்.

"ரேகா... நாம... இப்படியே... எத்தனை... நாள்... இருக்கிறது...?"

ரேகா புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"என்ன... சொல்ல... வர்றீங்க... பாஸ்கர்?"

"நமக்குன்னு... ஒரு குடும்பம்... குழந்தைகள் வேண்டாம்...?"

வேணும்... கண்டிப்பா... வேணும்...

"அப்ப... நாம கல்யாணம் பண்ணிக்கணும்... சட்டப்படி கணவன் மனைவியா... ஆகிக்கணும்..."

பாஸ்கர் சொன்னதற்கு ஏதோ ஜோக்கை கேட்டது போல் ரேகா குபுக்கென சிரித்தாள்.

"என்ன... ரேகா... சிரிக்கிற...?"

"எனக்கு இந்த கல்யாணத்தில எல்லாம் நம்பிக்கை இல்ல பாஸ்கர்..."

"அப்போ...?"

"வேணா... உங்களுக்காக வேண்டி... சம்மதிக்கிறேன்... கழுத்துல தாலியை கட்டிக்கிறேன்...

'ஹ... ப்பா...'

பாஸ்கர் பெருமூச்சுவிட்டான்.

"ஆனா... ஒரு கண்டிஷன்..."

"கண்டிஷனா...?"

"ஆமா... கல்யாணம் சிம்பிளாத்தான் நடக்கணும்... அதுவும் நமக்கு ரொம்ப வேண்டியவங்க முன்னால... கோயில்ல... வைச்சு மாலையை மாத்திக்கணும்... கல்யாணத்தை முடிச்சுக்கணும்..."



"ஓ... கே...! எப்படியோ... நீ... சம்மதிச்சியே... அது... போதும்...!"

தலையாட்டி சந்தோஷமாய் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி விட்டான் பாஸ்கர்.

நாட்கள் மேலும் நகர்ந்தது.

ஒரு நல்ல நாளில் நண்பர்கள் புடை சூழ... கோயிலில் மாலை மாற்றி ரேகாவும் பாஸ்கரும் திருமணம் செய்து... கொண்டாயிற்று.

இது பற்றி எதுவும் அறியாதவளாய் சுமதி அன்றும் வழக்கம் போல் வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

நாட்கள் ஓடியது.

சுமதி ரொம்பவும் தெளிவாகிவிட்டாள்... பாஸ்கருக்கு கல்யாணமாயிற்று- இனி பாஸ்கர் நம் வாழ்வில் இல்லையென்பதை புரிந்து கொண்டாள். ஆனாலும் பாஸ்கர் இப்படி அதிரடியாய் நடவடிக்கைகளில் இறங்கியது அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. படபடவென அவளுக்கு டைவர்ஸ் நோட்டீஸ் விட்டவன்... பின்... அதே வேகத்தில் சொன்னபடியே... கூட வேலை பார்க்கும் ரேகாவை கல்யாணம் செய்து கொண்டான்... என்பது அவளை ரொம்பவும் திகைப்பாக்கியது... மனித மனம் தான்... எப்படியெல்லாம் மாறுகிறது...? ஒரு காலத்தில் தன்னையே சுற்றி வந்தவன்... இன்று... தன்னை... யாரென்று கேட்குமளவுக்கு மாறிப்போய்... விட்டானே...! இப்படித்தான் ஆபீஸ் நேரங்களில் பாஸ்கரைப் பற்றிய நினைப்பு வந்து... அவளை கவலையில் ஆழ்த்தும். துக்கத்தை கொடுக்கும். நாளாவட்டத்தில் சுமதி வலுக்கட்டாயமாக... வந்து விட்டால்... இயந்திரம் போல் ஆகிக்கொண்டு. தான் பார்க்க வேண்டிய வேலைகளை... தள்ளிப் போடாமல் பெண்டிங் வைக்காமல் ஒன்றுவிடாமல் முடித்துவிடுவாள். ஆபீஸில்தான் இப்படி. வீட்டிற்கு வந்தால் அவள் சுபாவமே மாறிவிடும். கலகலவென்று ஆகிவிடுவாள்... ராதா சுகன்யாவும் அவள் வருவதற்கு முன்பே காலேஜ் முடிந்து வந்திருப்பர். ராஜம் அவள் வந்ததும் கிச்சனுக்குள் நுழைந்து மின்னல் வேகத்தில் காபியை ரெடி பண்ணி கொண்டு வந்து விடுவாள்... பின் சுமதிதான். சுகன்யாவிற்கு... கூந்தலை சிக்கலெடுத்து... தலைமுடியை வாரி ஒழுங்குபடுத்தி... புதுப்புது டிஸைனில் வரி வரியாக பண்ணிவிடுவாள். பின் கணேஷிற்கு தினேஷிற்கு பாடமெடுக்க... ராதாவிற்கு காலேஜ் பாடங்களில் சந்தேகத்தைப் போக்க... என அப்படி இப்படி... நேரம் விரைந்து போய்விடும்.

மேலும் சுமதி மறந்தது போலவே பாஸ்கரை அவன் குடும்பத்தினரும் மறந்திருந்தனர். பாஸ்கரின் தங்கைகளுக்கும் சரி. தம்பிகளுக்கும் சரி. அவனை நினைத்தாலே... அவனது கடுகடுவென விரட்டும் சுபாவம்தான் ஞாபகத்திற்கு வரும். ராஜம்தான் இடையிடையே மனசு கேட்காமல்... 'ஆனாலும் உன் வாழ்க்கை... இப்படியாயிடுடே... சுமதி... பாஸ்கர்... உன்னை...

இப்படிப் பண்ணிட்டானே...?' என்று அங்கலாய்ப்பாள். நாளாவட்டத்தில் அதையும் நிறுத்திவிட்டாள்... அந்தக் குடும்பத்தில் சுமதி... ஒரு மூத்த பெண் போலவே மாறிவிட்டாள்.. வீட்டு நிர்வாக பொறுப்பில் இருந்து... எல்லோருக்கும்... தேவையானவைகளை உடனடியாய் கவனித்து அவர்கள் கேட்பதற்கு முன்பே சுமதி வாங்கிக் கொடுத்துவிடுவாள். மொத்தத்தில் சுமதியை எல்லோருக்கும் பிடித்துவிட்டது. அவள் மீது உயிரையே வைத்திருந்தார்கள்.

ராஜமும்... அடிக்கடி... சுமதியைப் பார்த்து, அவள் முகம் மலர செய்யும் வேலைகளைப் பார்த்து அதிசயித்துப் போய்...! என்ன இருந்தாலும்... ஒரு மருமகள் இப்படியெல்லாம் உழைத்து... தன் உடம்பை வருத்திக் கொள்வாளா...? என்று வியந்தாள்... நெகிழ்ச்சியுடன் சுமதியையே பார்ப்பாள். சந்தோஷம் கொள்வாள். சுமதியும் அதுபோல் சந்தோஷமாய்த்தான் இருந்தாள். வாழ்க்கை அமைதியாய் ஓடிற்று.

அந்த அவர்களது அமைதியான வாழ்க்கைக்கு திரும்பவும் பாஸ்கர் உருவில் சோதனை வரும் என்பதை அப்போது அவர்கள் உணரவில்லை.



## 19

**பா**ஸ்கரும் ரேகாவும் புதிதாய் ஒரு வீடு பிடித்து வாழ்க்கையைத் தொடங்கியிருந்தார்கள். பாஸ்கருக்கு அளவில்லாத ஆனந்தம். தான் நினைத்தபடியே... ஒரு வாழ்க்கையை நினைத்த ஊரிலே தொடங்கிவிட்ட... பூரிப்பு... சந்தோஷம்... முகம் முழுவதும் தாண்டவமாட ஆபீஸில் வளைய வந்தான்.

இருவரும் வாழ்க்கையை சந்தோஷமாய் அனுபவிக்க ஆரம்பித்தார்கள். தினம் சினிமாதான். இரவுச் சாப்பாடு ரெஸ்ட்ராண்டில் தான் கச்சேரி. நாடகம் என்று ஒன்று விடுவது கிடையாது. தவறாமல் இருவரும் ஆஜராகிவிடுவார்கள். சந்தோஷமாய் ஆரம்பித்த அவர்களது வாழ்க்கை... எந்தப் பிரச்சனையில்லாமல் செல்ல... அதற்கு... அவர்களது.. சந்தோஷத்திற்கு சோதனை புது மேனேஜர் உருவத்தில் வந்தது.

அன்று... அந்த பெங்களூர் கிளைக்கு புதிய மேனேஜராய்... மோகனை நியமித்திருந்தார்கள்... மோகன் இளவயதுக்காரன்... வாலிபத் துடிப்பு, அந்த விலகாத மைனர் களை நிரம்பவே. அவன் முகத்தில் தாண்டவமாடியது கண்டு... இவன் எப்படி மேனேஜர் பதவிக்கு வந்தான்...? என்று ஆச்சரியப்படாதவர்கள் கிடையாது. மோகன் தன் உருவத்தைப் போலவே... தன் நடவடிக்கைகளிலும் இருந்தான்.. வந்தவன் கண்களுக்கு முதல் வேலையாய் தென்பட்டுவிட்டாள் ரேகா. ரேகாவின்... கவர்ச்சியும்... தாராளமாய்... அவள் எல்லோரிடமும் பழகும் சுபாவமும் அவனை



கண்டியிழுக்க... முதற்காரியமாய் ரேகாவை அக்கௌவுண்டிங் செக்ஷனில் இருந்து மாற்றினான்.

தனது செக்ஷனுக்கு கொண்டு வந்து தனது செகரட்டரியாகவே ஆக்கிக் கொண்டான். தான் எப்போதும் ரேகாவை பார்க்கும் படியாகவும்... அடிக்கடி பேசும்படியாகவும் சந்தர்ப்பங்களையும் சூழ்நிலையையும் உண்டாக்கி ரேகாவும் வழக்கம் போலவே தனது 'சோஷியல்' தனத்துடன் அவனுடன் பழக ஆரம்பித்தாள். அவனது கம்பீரமான மேனேஜர் அந்தஸ்தும்... டாம்பீகமான இவனது ஸ்டைலும் அவளை ஈர்க்கவே செய்திருந்தது. போதாக்குறைக்கு மோகன் இயற்கையிலே பணக்காரன். சொந்தமாய் கார், பங்களா அந்தஸ்து கொண்டவன். முக்கியமாய் இன்னும் கல்யாணம் என்ற கால்கட்டில் அகப்படாமல் ஜாலியாய் திரியும் ஆசாமி. மேலும் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் மீட்டிங். அட்டெண்ட் பண்ணணும்... செமினார்ல கலந்துக்கணும் என்று ஆபீஸ் வேலையாய். செகரட்டரி என்ற முறையில் ரேகாவை தன்னுடன் காரில் அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருக்க... அவர்களுக்குள்... பேச்சு பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் வளர ஆரம்பித்தது. பாஸ்கர்... இதையெல்லாம் கண்டு சகிக்க முடியாமல் பொறுக்க முடியாதவனாய் துடித்தான். அவனுக்கு ரேகாவின் மேல் கோபம் கோபமாய் வந்தது. இவள் இப்படி இடம் கொடுக்கப் போய்தானே அவன் இந்த ஆட்டம் ஆடுகிறான். என நினைத்தான். ரேகாவிடமும் ஒன்றிரண்டு முறை அவள் புரிந்து கொள்ளும்படி நாசூக்காய் சொல்லிப் பார்த்தான்.

ஹூம்... ரேகா... அதை உணர்ந்த மாதிரியே தெரியவில்லை. பாஸ்கரால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. அன்று வீட்டில்... இரவு சாப்பிட்டுவிட்டு படுத்ததும் 'ரேகா ஒரு முக்கியமான விஷயம்... நீ... நம்ம மேனஜரோடு இப்படி பேசறது பழகுறது எனக்கு கொஞ்சமும் பிடிக்கலே..." என்றான்.

அவன் சொன்னதும் ரேகா... திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். ஒரு கணம்தான். மறுகணம் அவள் முகம் சாதாரணமானது. "ஆனா... எனக்கு... அது... பிடிச்சிருக்கு!" என்றாள் டக்கென திரும்பிப்படுத்துக் கொண்டாள்.

பாஸ்கர் சுத்தமாய் அதிர்ந்து போனான்.

## 20



**நா**ளுக்கு நாள் ரேகாவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அவள் மோகனுடன் உள்ள பேச்சை... பழக்கத்தை நிறுத்தவே இல்லை. மாறாய் மேலும்... மேலும் அவனுடன் பழகி நெருங்கிக் கொண்டிருந்தாள். சிலசமயம்... அவள் பாஸ்கரையோ... பாஸ்கர் பேச்சையோ... சட்டை செய்யாதது போல் நடந்து கொண்டாள்.

பாஸ்கருக்கு ஒரு விஷயம் தெளிவாய்ப் புரிந்து விட்டது. ரேகா சாதாரண பெண் இல்லை. மலர் விட்டு மலர் தாவும் வண்டு என நம்மைவிட இளமையும் வசதியும் உள்ள மோகன் வந்ததும்... அவனுடன் ஒட்டிக் கொள்ளப் பார்க்கிறாள். மற்றபடி அவள்... நம்மையோ... புருஷன்... மனைவி என்ற கட்டுப்பாட்டையோ கொஞ்சமும் மதிப்பது கிடையாது... என்பதையும் புரிந்து கொண்டான். அவள் அதற்கேற்றார்போல் அடுத்து வந்த நாளில் அவன் ஏதோ கேட்கப் போக ரேகாவின் முழு சுயரூபம் தெரிந்தது.

அன்று.

சனிக்கிழமை.

மதியம் விடுமுறை ஆனதால் பாஸ்கர் புத்தகமொன்றை எடுத்து புரட்டிக் கொண்டிருந்தான். புரட்டிக்கொண்டிருந்தவன்... தற்செயலாய் நிமிர... ரேகா சேலை மாற்றி எங்கோ அவசரமாய் கிளம்புவதை பார்த்து திடுக்கிட்டான்.

"ரேகா... எங்க... கிளம்பற...?" என்றான்.

ரேகா சர்வசாதாரணமாய் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"என்ன... கேட்டீங்க...?" என்றாள் காதில் விழாதது போல்.

"எங்கே... கிளம்புறேன்னு... கேட்டேன்..."

"பார்த்தா... தெரியல... ஆபீசுக்குத்தான்...!"

"ஆபீசுக்கா...? அதான்... வேலை... முடிஞ்சாச்சே... மதியம் லீவுதானே...!"

"இது... மேனேஜர்... என்னை... வரச்சொல்லியிருக்கார்..., முக்கியமான சில... ஃபைல்ஸ்... பார்க்கணுமாம்..."

பாஸ்கர் எழுந்து விட்டான்... நிதானமாய் அவள் பக்கம் வந்து அவளை விஷமமாய் பார்த்தான்.

"மேனேஜர்... ஃபைல் மட்டும் பார்ப்பாரா...? இல்ல... இப்படிச் சிவி சிங்காரிச்சுக்கிட்டு போற உன்னையும் பார்க்கப் போறாரா...?"

பாஸ்கர் கேட்க, "ஸ்டாப்... இட்...!" ஆவேசமாய் கத்தினாள் ரேகா..."

"மைண்ட் யுவர்.... வோர்ட்ஸ்...' என்றாள் கோபமாய்...

அவள் அப்படிக் கத்தியதும்... பாஸ்கருக்குள் ஆத்திரம் கோபம் பொங்கியது...?" பாஸ்கர் வெடிக்க... அவள்... ட்டி' போட்டு அழைத்த கோபத்தில் ரேகாவும் சூடானாள்.

"பாஸ்கர்... மொதல்ல... மரியாதையா பேசுங்க... நானும் பதிலுக்கு... 'டீ' போட்டு பேச ரொம்ப நேரம் ஆகாது..."

"என்னடி..... சொன்ன...?" என்றபடி..... பாஸ்கர் கோபம் பொங்க வெகுண்டு... பளீரென... அவளது செவிட்டில் ஓங்கி அறைந்து விட்டான்.

அவ்வளவுதான்... கன்னத்தைப் பிடித்தபடி துடித்த ரேகாவுக்கு வந்ததே... கோபம். 'தூ' – நீயெல்லாம் ஒரு மனுஷனா?" என்றபடி தன் பலம் கொண்டு



அவனை அப்படியே தள்ளிவிட..... பாஸ்கர் தூரமாய்... சோபா பக்கம் போய் விழுந்தான்.

பாஸ்கர் அவளின் இந்தச் செயல் கண்டு அதிர்ந்தே போய்விட்டான்.

ரேகாவோ நொடியில் இயல்புக்கு வந்தவள், "பிஹேவ் யுவர் செல்வ்ஸ்" என்று சத்தமாக கத்திவிட்டு... அவள் பாட்டுக்கு ஒன்றுமே நடவாதது போல் திரும்பவும் நிதானமாய் தனது அலங்காரத்தை முடித்து விட்டு அவனை கொஞ்சமும் சட்டை செய்யாமல் கிளம்பிச் செல்ல.

பொட்டிலடித்தது போல் திகைத்து அசந்து போய் வியப்பின் உச்சிக்கே போய்விட்டான் பாஸ்கர்.

அதற்குப் பிறகு வந்த... இரண்டு மூன்று நாட்களும்... இதே போல் சண்டை சச்சரவு இருவருள்.... எழும்ப.... விவாதம் முற்றியது... பேச்சு தடித்தது... கோபத்தின் எல்லையில் இருவரும் சண்டையிட்டு கடைசியில்...

"குட்... பை... பாஸ்கர்...!"

சொல்லிய ரேகா... அதே வேகத்தில்... கொஞ்சமும் தாமதியாமல் யோசிக்காமல் கழுத்தில் கை வைத்தாள். சர்வசாதாரணமாய் அவன் கட்டியிருந்த தாலியைச் கழற்றினாள். கழற்றியவள் திகைத்து ஸ்தம்பித்திருந்த பாஸ்கரின்... கைகளில் கொடுத்துவிட்டு... தயாராய் பாக், செய்து வைத்திருந்த தனது சூட்கேசுடன் நிதானமாய் எந்தவித உணர்ச்சியுமின்றி வீட்டை விட்டு கிளம்பிப்போனாள். அப்படியே இடிந்து போய்விட்டான் பாஸ்கர்.

## 21



காலம்... காலத்தின் வேகம் மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்று. சொல்லப்போனால் அது சுழற்சி கூட... அந்த சுழற்சியின் முன்னால் பழையன கழிந்து புதியன புகுதல் இன்றியமையாத ஒன்று. ஒவ்வொரு நிகழ்ச்சிகளும்... சந்தித்த சம்பவங்களும் பழையனவாய் ஆகி... புது வாழ்க்கையே... மாற்றங்களாய் மாற்றங்களின் பிரதிபலிப்பாய் ஓடிக் கொண்டிருந்தது.. அப்படியே சுமதி குடும்பத்திலும் மாற்றங்கள் உருவாகின. ராதா... காலேஜ் முடித்து பெரியவளாகிவிட்டாள். சுகன்யா இரண்டாவது வருட படிப்பை நெருங்கிக் கொண்டிருந்தாள். கணேஷ்ும், தினேஷ்ும் சிறுபிள்ளை பருவம் போய்... விவரங்கள் அறியும் வயதை எட்டியிருக்க... சுமதி சும்மா இருக்கவில்லை. ராதாவுக்கு தனக்கு தெரிந்த ஒருவர் மூலம் பிரைவேட் கம்பேனி ஒன்றில் அவளது டைப்ரைட்டிங் தேர்ச்சியை வைத்து டைப்பிஸ்ட் வேலையொன்று வாங்கிக் கொடுத்தாள். சொற்பச் சம்பளம் என்றாலும்... ராதா மாதிரி பெண்ணுக்கு... உலகத்தை... நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையை புரிந்து கொள்ள இது போன்ற அனுபவங்கள் உதவும் என்று நம்பினாள்.

கூடவே... அவளுக்கு.. ராதாவுக்கு... இப்படியே கல்யாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்ற பொறுப்பும் கவலையும் வந்துவிட்டது. தனக்கு தெரிந்த ஆபீஸ் ஆட்களின் மூலம் புரோக்கர் ஒருவரைப் பிடித்து... ராதாவுக்கேற்ற நல்ல வரனாய் பார்க்கும்படி சொல்லியிருந்தாள். கூடவே அவளுக்கு இன்னொரு கவலை. வரதட்சனை கவலை.. வருகிறவன் சும்மாவா ராதாவைக் கட்டிக் கொள்வான்... நகைகள் சீர் செய்ய வேண்டுமே..? என்று யோசித்தாள்... அவளுக்கு அவ்வப்போது.. தனது சம்பள பணத்தை செலவுகள் போக... மிச்சம் பிடித்து பாங்க் கணக்கில் சேமித்து வருவது... ஞாபகத்திற்கு வந்தது... அது கிட்டத்தட்ட ஒரு பத்துப் பதினைந்தாயிரம்... வரை இருக்கிறது. நகை நட்டுகளைப் பொறுத்த வரையில்... தனது... நகைகளே... போதும்.. கழுத்தில் தொங்கும் ரெட்டை வருடு தாலிச்சங்கிலியைத் தவிர மற்ற எல்லாவற்றையும் ராதாவுக்கே கொடுத்துவிட சுமதி தீர்மானித்திருந்தாள்.. எப்படியாவது ஒரு நல்ல வரனாய்ப் பார்த்து ராதாவுக்கு கல்யாண ஏற்பாடுகளைப் பண்ணிவிட்டால் பின் கவலையில்லை. அடுத்த பெண் சுகன்யாவிற்கு... படித்து... முடிக்க... இன்னும்... இரண்டு வருஷம் ஆகும்.. அதற்குள்.. அவளுக்கும் பணத்தை சேமித்துவிடலாம்.

மனதுள் கணக்குகள் போட்டவாறு சுமதி கவலை தோய்ந்த நினைப்புகளில் ஆழ்ந்தாள்.

அவளது நல்ல மனம், நல்ல நினைப்பிற்கு ஏற்றார் போலவே காரியங்கள் மளமளவென்று நடக்க ஆரம்பித்தன. புரோக்கர் மூலமாகவே நல்லவரன் ஒன்று ராதாவுக்கு வந்தது. பையனுக்கு அரசாங்க உத்தியோகம், நல்ல வாட்டசாட்டமாய் துறுதுறுவென இருந்தான்.. பெண் பார்க்கவென அவனது பெற்றோர்கள் வந்தவர்களும்... நல்ல சுபாவமாய்... இனிமையாய் பழகும் விதமாய் இருக்க...

சுமதிக்கு அவர்களைப் பிடித்துவிட்டது. ராதாவுக்கு ஏற்ற இடம் தான் என்று மனசுக்குள் மகிழ்ந்தாள்.. அவளைப் போலவே மாப்பிள்ளை வீட்டாருக்கும் ராதாவை, அடக்க ஒடுக்கமாய் குடும்பபெண்ணாய் லட்சணத்துடன் இருக்கும் ராதாவை ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

சம்பந்தம் பேசத் தயாராகினர்.

ராதா... தனது நிலமையை வெளிப்படையாய் எடுத்துச்... சொல்லி... தன்னால் செய்ய முடிந்த சீர் வரிசைகளை விளக்க.. அதற்கு அவர்கள்," எங்களுக்கு பெண்தான் முக்கியம்... பொன் முக்கியமில்லை... நீங்க... உங்க விருப்பம் போல செய்யுங்க... நாங்க ஒண்ணும் கேட்க... மாட்டோம்..." என்று சொல்லிவிட... காரியங்கள் நடக்க ஆரம்பித்தன...

ஒரு நல்ல சுபமுகூர்த்த நாளில் கல்யாண நிச்சயதார்த்த நிகழ்ச்சியை நடத்திவிடுவது... என இருதரப்பினரும் முடிவிற்கு வந்தார்கள்.



இங்கு... இப்படியிருக்க...

தன் வீட்டில் நடக்கும் விஷயங்களை... சுமதி பொறுப்பாய் தன் குடும்பத்தை நிர்வகித்து...

பொறுப்பாய் தன் தங்கை ராதாவுக்கு கல்யாண ஏற்பாடுகள் வரை செய்திருப்பதை. ஆபீஸ் நண்பர் ஒருவர் மூலம் கேட்ட... பாஸ்கர் புழுங்கிப் போனான்... தான்... ஒரேடியாக... தன் குடும்பத்திற்கு வேண்டாமல் வேண்டாதவனாகப் போயிவிட்டோமே..? என்று ஆற்றாமை தீயாய் அவனுள் பொங்கியது. போதாக்குறைக்கு... ரேகா வேறு தாலியை கழற்றி எறிந்து விட்டு, 'குட்பை' சொல்லிவிட்டு போய் விட்டாள். எப்படி சுமதியை தனக்கு தப்பான மேட்ச்... என்று நினைத்தானோ.... அதைவிட நூறு மடங்கு தப்பான மேட்ச் இந்த ரேகா என்று நினைத்தான்.. அதைவிட அவனை விட்டுப் போன ரேகா சும்மா இருக்காமல் அந்த மேனேஜர் மோகனுடன் போய் சேர்ந்து கொண்டு புது வாழ்க்கையை ஆரம்பித்தது. அவனுக்கு பெரும் ஆத்திரத்தை கிளப்பியது.. தான் ரொம்பவும் அவமானப்பட்டு விட்டதாய் பாஸ்கர் பொருமினான். அவனுள் கோப அலை திரும்பவும் உருண்டது... பந்தாய்.. எகிற ஆரம்பித்தது...

தனது... இந்த நிலைக்கு... இந்தக் கேவலமான அவமானங்களுக்கு சுமதிதான்... காரணம்... என்று பாஸ்கர் முழு மனதாய் நம்பினான்... அவள் மட்டும்... எனக்கு ஒழுங்காய் வாய்த்திருந்து... என் சொல்படி இங்கு என்னுடன் வந்திருந்தால்... எனக்கு இப்படியெல்லாம் நிகழ்ந்திருக்குமா...? இப்படியொரு அவமானம் ஏற்பட்டிருக்குமா...?... அவளை... அவளை.. சுமதியை விடக்கூடாது.. நம்மை இந்த நிலைக்கு ஆளாக்கிய சுமதியை விடக்கூடாது... அவளை பழிவாங்க... வேண்டும்... நம்மைப் போலவே அவ்ளையும் அவமானப்படுத்தி துடிக்க வைக்க... வேண்டும்... என்ன... செய்ய...? எப்படிச் செய்ய...?

பாஸ்கர் கொதித்துப் போய் யோசிக்க ஆரம்பித்தாள். விபரீதமான அவன் மனதில் சுமதியை ஏமாற்ற, பழிவாங்க, விபரீதமான ஒரு திட்டம் தோன்ற ஆரம்பித்தது.

ஆனால் உள்மனசு சுயநலமாக யோசித்த தான்-தான் குற்றவாளி என்பதை சுட்டிக் காட்டியது. மனதிலிருந்த சாத்தான் மறைந்து தெளிவு பிறந்தது. கண்ணாடி முன்நின்று தனது மனதோடு நேரடியாக பேசினான். தெளித்து கோலமிட... வீட்டுக் கதவைத் திறந்த சுமதிக்கு... அதிர்ச்சி... வெளியில்.... பாஸ்கர்.. கையில்... சூட்கேஸுடன்.

"என்னை.... மன்... னி... ச்... சிரு... நான்... தப்பு... பண்ணிட்டேன்..." குமுறியபடி... சாட்ஷ்டாங்கமாய் தன் காலில் விழுந்து அரற்றும் பாஸ்கரைக் கண்டு ஒரு கணம் அப்படியே அதிர்ந்து விட்டாள் சுமதி... ஒரு புறம் அவன் திருந்திவிட்ட சந்தோஷமான அதிர்ச்சி. மறுபுறம் அவன் தன்னைத்

தேடி வந்த மகிழ்ச்சி... எல்லாம் ஒரு சேரத் தாக்க... திக்குமுக்காடி அப்படியே சில நிமிடங்கள் ஸ்தம்பித்து விட்டாள்... மறுகணம் அவசரமாய் நினைவுக்கு வந்தவளள்ஓ, பாஸ்கர்.. இன்னும் காலைப்பிடித்து அரற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து பதறி விலகியவள்,

"மொதல்ல... எழுந்திருங்கோ..." என்றபடி கைத்தாங்கலாய் அவனைத் தூக்கினாள்..

"நான்... தப்பு பண்ணிட்டேன்... என்னை... மன்னிச்சிரு... சுமதி..."

பாஸ்கர்... விடாமல் அரற்றினான்...

"அதெல்லாம் அப்புறம்... மொதல்ல... உள்ளே... வாங்கோ...!" சுமதி அவனை சந்தோஷமாய் உள்ளே... அழைத்துப்போக.

அதற்குள் சப்தம் கேட்டு ராஜம்.... ராதா... சுகன்யா, கணேஷ், தினேஷ் என எல்லோரும் விழித்து வந்து பார்த்தனர்.

அவர்களை நோக்கி ஒரு சேர கை கூப்பினான்.

"நான் தப்பு பண்ணிட்டேன்... என்னை மன்னிச்சிருங்க...!" விடாமல் அந்த வார்த்தைகளை வாய் அரற்றியது... கண்களில் தாரை தாரையாய் கண்ணீர் வழிந்தது.

பாஸ்கர் நிஜமாகவே உருகினான்.. தன் தவறுக்கெல்லாம் வருந்தினான். கூப்பிய கையை விலக்காமல் பிச்சை கேட்பது போல் நின்றான்.

எல்லோரும் மனம் பதைத்து அவன் கதறுவதை ஆச்சரியமாய் நம்பாத அதிசயமாய்ப் பார்த்தனர்.. இது நிஜம்தானா? இல்லை மறுபடியும் வேதாளம் மரம் ஏறி விடுமா? என்ற பயம் எல்லோர் முகத்திலும் வெளிப்பட... பார்த்தனர்.

திரும்பி சுமதியின் முகத்தையே ஆவலாய்ப் பார்த்தனர்.

சுமதி என்ன முடிவெடுக்கப் போகிறாள்? பாஸ்கரை மன்னிப்பாளா? பாஸ்கரை ஏற்றுக் கொள்வாளா?

பாஸ்கரும் அதே தவிப்புடன் சுமதியையே பார்த்தான்.

சுமதி அதுவரை முகம் இறுக இருந்தவள் மெல்ல இதழ் பிரித்தாள். புன்னகை கீற்று மெலிதாய் தோன்றி பெரிதாய் மாறிற்று.

எல்லோர் முகத்திலும் சந்தோஷக்கலை பொங்க ஆரம்பித்தது.

❐ ❐ ❐